

# புலிப்பாணி வைத்தியம்

இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
சென்னை - 600 106.

தமிழ் மருத்துவ நூல் வரிசை - 10

# புலிப்பாணி வைத்தியம்

(ஓலைச்சுவடியினின்று பதிப்பிக்கப்பட்ட நூல்)

வெளியீடு :

**சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு**

**இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை**

**சென்னை - 600 106**

**2008**

**பதிப்புத் தகவல்**

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | புலிப்பாணி வைத்தியம் (தமிழ் மருத்துவ நூல் வரிசை - 10) |
| ஆசிரியர் | : | புலிப்பாணி |
| பதிப்பு | : | சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு<br>இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை<br>சென்னை - 106 |
| பதிப்புரிமை | : | தமிழ் நாட்டரசு |
| பொருள் | : | சித்த மருத்துவம் |
| பதிப்பாண்டு | : | முதற்பதிப்பு 2008 |
| பக்கங்கள் | : | XX + 60 = 80 |
| படிகள் | : | 1000 |
| தாள் அளவு | : | 1 × 8 டெம்மி |
| அச்சுப் புள்ளி | : | 11 புள்ளி |
| விலை | : | ரூ. 30.00 |
| கட்டமைப்பு | : | சாதாரண அட்டைக்கட்டு |

அச்சிட்டோர் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
189 (101-D), ராயப்பேட்டை நெடுஞ்சாலை
லஸ், மயிலாப்பூர், சென்னை - 600 004.
✆ : 24661807, 24987562

**இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை,**
**சென்னை - 600 106.**

**சித்த மருத்துவ நூல் வெளியீட்டுப் பிரிவு**

## நூலாக்கப் பணிக்குழு

பதிப்பாசிரியர்
**முனைவர் மரு. ஆனைவாரி ஆனந்தன்,** பிஎச்.டி.
சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு)

கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர்
**மரு. பி.ஆர். சகுந்தலா,** எம்.டி. (சி)

உதவி பதிப்பாசியர்கள்
**திரு. த. அழகப்பராசு,** M.A., M.A., M.L.I.S., M.Phil., B.Ed.
**திருமதி செ.இரா. பிரசன்னா,** M.A., M.Phil., B.Ed.,

சுவடி நகலெடுப்போர்
**திரு. வெ. சாரங்கபாணி**
**திருமதி த. லெட்சுமி**
**திருமதி நா. பாக்கியசுந்தரி,** B.A.

**ஜி.ஏ. ராஜ்குமார்,** இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையர்

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி
ஆணையரகம், சென்னை - 600 106.

# வாழ்த்துரை

**புலிப்பாணி வைத்தியம்** எனும் நூல், **தமிழ் மருத்துவ நூல் வரிசையில்** பத்தாவது நூலாக வெளிவருகிறது. ஓலைச் சுவடியினின்றும் பதிப்பிக்கப்படும் இந்நூல் 114 பாடல்களைக் கொண்டது.

பல காலம் ஏட்டில் எழுதவியலாது வாய்மொழியாகவே பாடப்பெற்றுப் பின் ஓலைச்சுவடிகளில் எழுதப்பெற்ற மருத்துவச் சுவடி நூல்களுள் இதுவும் ஒன்று. அதில் பாடல்களாக மட்டுமே காணப்பட்ட கருத்துகள், பாடலுடன் உரையும் சேர்த்து அச்சில் தற்போது வெளியிடப்படுகிறது.

ஓலைச்சுவடியாக இருந்ததை அச்சு நூலாக வெளியிடும் பணியில் துணைபுரிந்த இணை இயக்குநர், சிறப்பு அலுவலர் (மொழிபெயர்ப்பு) கூர்ந்தாய்வு மருத்துவ அலுவலர் (சித்தா), தமிழ்ப்புலவர்கள், நகலெடுப்போர், நூலின் மருத்துவக் குறிப்புகளைச் சீர்செய்து வழங்கிய மரு. சி. இராமலட்சுமியம்மாள், மரு. மு. கிருஷ்ணவேணி, மரு. ஜி. திலகவதி, அச்சகத்தார் யாவர்க்கும் எனது பாராட்டுதல்களும் வாழ்த்துகளும் உரித்தாகட்டும்.

*01.02.2008*

**சிறப்பு ஆணையர்**

# ஆய்வுரை

**சுவடி**

பதிப்பிற்காக எடுத்துக் கொள்ளப்படும் இந்தச் சுவடி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறையின் கீழ் இயங்கும் சுவடி நகல் பிரிவில் உள்ள சுவடி. 707 என்று எண்ணிடப்பட்ட இந்தச் சுவடி 17 செ.மீ. நீளமும் 3.2 செ.மீ. அகலமும் கொண்டதாகும். பக்கம் ஒன்றில் 5-6 வரிகள் எழுதப்பட்டுள்ளன.

1970-களிலிருந்து தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களி லிருந்தும் பல குழுக்கள் வழியாகச் சேகரிக்கப்பட்ட சுவடிகள் சித்த சுவடி நகல் பிரிவில் பாதுகாத்துப் பதிப்பிக்கப்பட்டு வருகிறது. அவ்வகைச் சுவடிகளில் ஒன்று இப்போது 114 பாடல் களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

ஒரு சுவடி பதிப்பிக்கப்படும் போது

நூலாசிரியர்

பதிப்பாசிரியர்

உரையாசிரியர்

வெளியீட்டாளர்

அச்சகத்தார்

விற்பனையாளர்

எனப் பலரது பணியும் ஒருங்கே அமையப் பெற வேண்டும். இதில் ஒருவரே ஒன்றுக்கும் மேற்பட்ட பணிகளை மேற்கொள்வதும் உண்டு.

**நூலாசிரியர்**

நூலாசிரியருக்கும் நமக்கும் நேரிடைத் தொடர்பில்லை. நூலாசிரியரே நம்முடன் இல்லை. அவ்வாறெனின் நாம் நமக்குண்டாகும் ஐயப்பாடுகளைக் களைந்து கொள்ள முடியாது.

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால் நூலாசிரியர் நம்முடன் இல்லை என்பதைவிட இது நூலாசிரியரின் நூலே இல்லை என்பது தான் உண்மை.

16,17-ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்து வந்த சித்தர்கள் இன்று உயிரோடிருக்க வாய்ப்பில்லை. எழுதப்பட்ட சுவடிகள் கூட 300-ஆண்டுகளுக்கு மேல் அழியாதிருக்க வாய்ப்புகள் குறைவு. எனவே புலிப்பாணி எழுதிய அல்லது புலிப்பாணி சொல்ல எழுதப்பட்ட சுவடியாக இது இருக்க வாய்ப்பில்லை. எனவே ஆசிரியர் நேரடித் தொடர்பு, நாம் பதிப்பிக்கும் இந்தச் சுவடிக்கு இல்லை என்பதால் ஆசிரியர் செய்யவேண்டிய பணியும் பதிப்பாசிரியர் செய்ய வேண்டியதாகி விடுகிறது. பதிப்பாசிரியர்க்குப் பொறுப்பும் அதிகரிக்கின்றது; சுமையும் மிகுதியாகின்றது. எனவே நூலாசிரியர் பணியையும் பதிப்பாசிரியர் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

## உரையாசிரியர்

இதில் அமைந்துள்ள யாவும் பாடல்களாகவே அமைந்துள்ளன. அந்தப் பாடல்களுக்கு உரை எழுதவேண்டியவரும் பதிப்பாசிரியர் தான். ஒவ்வொரு பாடலுக்கும் அதன் கீழே உரை அமைக்கப் பட்டுள்ளது. முடிந்தவரை பாடலின் உரை முழுமையாக்க முயற்சி செய்யப்பட்டுள்ளது. சில போழ்து புரியாத நேரங்களில் பதிப்பாசிரியர் கருதும் பொருளே அமைக்கப்பட்டுள்ளது. சொல்லோ, தொடரோ முழுமைப்படுத்த முடியாத போது - விளங்காதபோது நட்சத்திரக் குறிகளுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சுவடியில் சில பாடல்களுக்குக் கீழே சில கடினச் சொற்களுக்குப் பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே இச்சுவடி ஆசிரியர் ஒருவர் சொல்லச் சொல்ல மாணவர் எழுதிக் கொண்ட சுவடியாக இருக்கலாம்.

## வெளியீட்டாளர் - விற்பனையாளர்

இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட சித்த, ஆயுர்வேத, யுனானி மருத்துவ நூற்களைப் பதிப்பித்து வெளியிட்டு வரும் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித்துறை ஆணையரகம் இந்நூலை வெளியிடுகிறது.

இத்துறையைச் சார்ந்த நூலகத்தில் அமைந்துள்ள விற்பனைப் பிரிவு, நூல்களை விற்பனை செய்து வருகிறது.

**சுவடிப் பதிப்பு**

பொதுவாகச் சுவடியைப் புரிந்து படித்து எடுத்தெழுதி முறையாக வெளியிடுவது சிரமமான ஒன்று.

சுவடி எங்கே தொடங்குகிறது, எங்கே முடிகிறது, அது எண்ணா, எழுத்தா, குறியா என்பனவெல்லாம் எளிதில் விளங்கா. தொடக்கம் முதல் இறுதிவரை ஓலை முழுமையும் எழுதப் பட்டிருக்கும். எங்கு பிரிக்க வேண்டும். எங்கு சேர்க்க வேண்டும் என்பன போன்ற பல ஐயப்பாடுகளும், சிக்கல்களும் தோன்றிக் கொண்டே இருக்கும்.

அவற்றைச் சீரசைக்கேற்ப பிரித்துணர்ந்து பாடலாகப் பிரிப்பதோ, உரைநடையாகக் கொள்வதோ எளிதான செயலன்று. பாடல்களாயின் அவற்றை உணர்ந்து பிரித்து தொடக்கம், முடிவைக் கண்டு எவ்வகையான பாடல் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அந்தந்த அமைப்பிற்கேற்ப அடிகளைப் பிரித்துணர்ந்து எழுதிக்கொண்டு அதற்கேற்ப சீரசைகளையும் அமைத்துக்கொள்வது அவசியமாகும்.

சீர், அடி போன்றவற்றில் உண்டாகும் எழுத்துப்பிழை, சொல்மாறுபாடுகள் போன்றவற்றைத் திருத்தி பொருளிற்கு ஏற்ப எடுத்து எழுதப்பட வேண்டும். சுவடிகள் அவ்வக் காலத்தின் தேவைக்கேற்ப படியெடுக்கப்பட்டு வந்துள்ளது. அவ்வாறு எழுதும்போது அயர்ச்சி, கல்வித்திறன் போன்றவற்றிற்கேற்ப பிழைகள் உண்டாகும். ஒருவர் சொல்ல பலர் எழுதும்போது கேள்வி ஞானக் குறைவினால் பிழைகள் ஏற்படும். கூலிக்காகப் படியெடுப்பவர் அதிக பக்கங்கள் எழுத வேண்டும் என்ற முனைப்பில் தவறாக எழுதி விடுவர். ஒரு நூலின் வெவ்வேறு பிரதிகள் கிடைக்குமானால் அவற்றை ஒப்பிட்டுத் திருத்தம் செய்ய பதிப்பாசிரியருக்கு வாய்ப்பு ஏற்படும். பெரும்பாலும் அவ்வாறு கிடைப்பதில்லை. எனவே கிடைக்கின்ற சுவடியை மட்டும் வைத்து முட்டி மோதி ஒரு முடிவுக்கு வர வேண்டியுள்ளது. இந்தச் சுவடிக்கும் ஒப்பிட்டுப் பார்க்க வேறு சுவடி ஏதும் கிடைக்க வில்லை.

நூலாசிரியர் எழுதியதைப் பதிப்பாசிரியர் திருத்தம் செய்யாமல் அப்படியே பதிப்பிக்க வேண்டும் என்று சான்றோர்கள் பலர் கூறுவர். நூலாசிரியரின் படைப்பில் மூல பாடத்தில் திருத்தம்

ஏதும் செய்யாமல் அவ்வாறே பதிப்பிப்பாரேயானால் படிப்போர் அந்த வரிகளைப் படித்து உணர்ந்து கொள்வது மிகக் கடினமான ஒன்றாகும்.

அவ்வாறு மூலபாடம் திருத்தம் செய்யாமல் அவ்வாறே பதிப்பிப்பது யாருக்கும் பயனளிக்காது. எனவே நுணுகி ஆராய்ந்து பதிப்பிக்க வேண்டிய பணி பதிப்பாசிரியரின் பணியாகும்.

திருத்தம் செய்து பதிப்பிக்கலாகாது எனக் கருதும் சான்றோர்க்கு சில வார்த்தைகள். நாம் பதிப்பாசிரியராக இருந்து திருத்தம் செய்வது நூலாசிரியரின் எழுத்துகளையோ, சொற்களையோ அன்று. ஒவ்வொரு நிலையிலும் **படியெடுக்கப்படும்** போதெல்லாம் ஏற்பட்டுவிட்ட பிழைகளைத் தான் நாம் திருத்தி எழுதி வெளியிடு கிறோம். எனவே இது தவறாகாது.

மேலும் இந்த நூல்கள் - **சுவடி நூல்கள் - மூல நூல்கள்** என்றெல்லாம் சொல்லப்படுவது ஆசிரியரின் நூலே இல்லை. அவர் நூலையோ அதன் படியையோ பார்த்து வேறு ஒருவர் எழுதிய நூல். எனவே திருத்தம் செய்து பதிப்பிக்க வேண்டியது அவசியமாகிறது. திருத்தம் செய்யாமல் பதிப்பிப்பதால் **தமிழ் இலக்கிய இலக்கணங்களில்** ஏற்படும் பிழைகளால் பாதிப்புகள் பெரிதாக ஏதும் நிகழாது. ஆனால் மருத்துவ நூல்கள் பிழை நீக்கப்படாமல் பதிப்பிக்கப்படுமேயானால் அப்பதிப்பினால் பலனேதுமில்லை என்பது வெள்ளிடை.

**புலிப்பாணி வைத்தியப் பதிப்பு**

புலிப்பாணி வைத்தியம் எனும் இச்சுவடிப் பதிப்பு, சுவடி யிலிருந்து முதன் முதலாக அச்சுத்தாளையும் கருப்பு மையையும் காணுகின்ற சுவடியாகும்.

முதலில் பொருளடக்கமும் அடுத்து நூலும் எப்போதும் போல் அமைக்கப்பட்டுள்ளது. பாடல்களை அடுத்து அதன் உரை அமைக்கப்பட்டுள்ளது.

நூல் பயில் மாணாக்கர்களும் பிறரும் எளிதில் புரிந்துணரும் வண்ணம் பொருளடக்கம் அகர முதலி, பாடல் முதற் குறிப்பு அகராதி, நோய்ப் பெயர்கள், மருந்து சரக்குகள் அகர முதலி என பின்னிணைப்புகள் தயாரிக்கப்பட்டு நூலில் சேர்க்கப் பட்டுள்ளன.

**மாற்றங்களும் திருத்தங்களும்**

இலக்கியச் சுவடிகள் பெரும்பான்மையும் யாப்பிலக்கண அடிப்படையில் செம்மையானதாக அமைந்திருக்கும். மருத்துவச் சுவடிகளில் பெரும்பான்மை சீரசையில் அத்துணை தெளிவுடனிருக்காது. மருத்துவ இலக்கியப் படைப்பாளர்கள் சீரசை போன்ற இலக்கண அமைப்பைவிட மருத்துவத்திற்கே முதலிடம் தருவார்கள். எனவே பாடல்கள் இலக்கண வரம்பை மீறி சீர்களும் வரிகளும் மிகுந்திருப்பதும், குறைந்திருப்பதும் வெகுவாகக் காணலாம். ஆனால் இந்த ஓலைச் சுவடியில் அவ்வகைப் பாடல்கள் மிகுதியாக இல்லை. சில பாடல்கள் மட்டுமே குறையுடன் காணப்படுகின்றன. இது ஆசிரியரின் குறையாகத் தோன்றவில்லை. பார்த்துப் படியெடுத்தோர் செய்துவிட்ட குறையாகவுமிருக்கலாம்.

எல்லாப் பாடல்களும் எண்சீர் ஆசிரிய விருத்தத்தால் அமைந்துள்ளன. ஆங்காங்கே சில பாடல்களில் சீர்கள் குறைந்திருப்பந்தக் காண முடிகிறது. இதில் மொத்தமாக 114 பாடல்கள் உள்ளன. எல்லாப் பாடல்களுமே எண்சீர் ஆசிரிய விருத்தத்தில் ஒரே மாதிரியாகவே அமைந்துள்ளன. சில இடங்களில் சீர் ஒருங்கமைப்பு முழுமையாக இல்லை.

**பாடல் பொருண்மை**

பாடல் பொருளைப் பொறுத்தவரை பொதுவாகச் சித்த மருத்துவம் என்று மட்டும் எடுத்துக் கொள்ளலாம்.

குடிநீர், குளிகை, பற்பம், சூரணம், எண்ணெய், தைலம், மெழுகு, நசியம், கலிக்கம், களிம்பு போன்ற பல மருந்துகள் தரப்பட்டுள்ளன. சுரம், சன்னி, பெரும்பாடு, குன்மம், நீரடைப்பு, மேகம், விஷக்கடிகள், மூலம், செங்கிரந்தி, வயிற்றிரைச்சல், இரத்தக் கடுப்பு போன்ற நோய்களுக்கு மருந்தைச் சொல்கிறது இந்நூல்.

இதில் 114 பாடல்கள் இருப்பதைக் கூறினோம். இடையில் உள்ள பாடல்கள் 65-76 முடியவுள்ள பாடல்கள் மருத்துவப் பாடல்களாக இல்லை. அவை ஆன்மிகப் பாடல்களாகக் காணப்படுகின்றன. இவை இந்நூலுடன் தொடர்புடையதல்ல என்றாலும் நூல் அமைப்பை மாற்ற வேண்டாம் எனக் கருதி அதே அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

நூலைப் படியெடுத்தவர் இந்நூலில் புதிதாக இந்தப் பாடல்கள் (65-76) பன்னிரண்டையும் சேர்த்து இடைச்செருகலாகச் செருகி இருப்பார் என்று கருதவும் இடமிருக்கின்றது. ஒரு சுவடி படியெடுக்கப் படும்போது சேர்த்தலும், நீக்கலும், மிகுதியும் நடைபெற்றிருக்கின்றது என்பதற்கு இது ஒரு சான்றாகும். எனினும் இந்நூலின் அமைப்பு கருதி அப்பகுதிகள் சுவடியில் இருந்தவாறே பதிப்பிக்கப் பட்டுள்ளன.

**அளவைகள்**

இந்தச் சுவடியில் காணப்படுகின்ற அளவைகள் அவ்வாறே இடம் பெறுமாயின் அளவு புரிந்து பயன்படுத்துவதில் சிரமம் இருக்கும் என்பதால் முடிந்தவரை தற்கால அளவைகளாக மாற்றப்பட்டுள்ளன.

அவ்வகையில், விராகன், உழக்கு, படி, நாழி, கழஞ்சு, பலம், தேக்கரண்டி, பணவெடை, துட்டெடை, வீசை, சாமம் போன்றன முடிந்தவரை இக்கால அமைப்பிற்கேற்ப மாற்றி தரப்பட்டுள்ளன.

**சொற்களும் சொற்பிரிவுகளும்**

சில சொற்கள் பேச்சு வழக்கில் உள்ளன. வேறு சில சொற்கள் பிழையாக எழுதப்பட்டுள்ளன. பெரும்பான்மையான பேச்சு வழக்குச் சொற்கள் எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றப் பட்டுள்ளன.

தலைப்புகளில் வந்த பேச்சு வழக்குச் சொற்களும், பாடல்களில் பயின்று வந்த பேச்சு வழக்கு சொற்களும் எழுத்து வழக்கிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன. சில சொற்கள் சரியாக எழுதப்படவில்லை.

பாடல் 21-இல் **''கொள்ளடா முருங்கையிலைச் சாற்றில் தோய்த்து''** என்பது சாற்றில் தேய்த்து என்று சுவடியில் எழுதப் பட்டுள்ளது.

**சொற்பொருள் - குறிப்பு**

சில பாடல்களின் கீழ் சொற்பொருள் விளக்கம் தரப் பட்டுள்ளது. சான்றாக முதல் இரண்டு பாடல்களில் ரவி - வெயில், அமுரி - மூத்திரம், பாச்சான் - கள்ளி என்பவை கீழ்க் குறிப்பாக எழுதப்பட்டுள்ளது.

இக்குறிப்புகள் நமக்கு ஒரு உண்மையைச் சொல்கின்றது. இந்தச் சுவடி மூலச் சுவடி அல்ல. பாடம் நடத்துகின்ற அல்லது மருத்துவம் சொல்லிக் கொடுத்த ஆசானின் சுவடியும் அன்று. மாணவர் சுவடியாகக் கருதலாம் அல்லது மூல நூலினின்று பயன்பாட்டு நோக்கில் தனக்காக ஓலையில் படியெடுத்து வைத்தவர் ஆசிரியர்/ஆசான் சொல்லச் சொல்ல சுவடியில் குறிப்புரை களையும் சேர்த்து எழுதிக்கொண்டுள்ளதாகக் கருதலாம்.

பாடல் 46-இல் தேள்காடி விஷமும் நீங்கும் என்று எழுதப் பட்டிருந்தது. தேள்கடியை தேள்காடி என்று தவறுதலாக எழுதி விட்டதாகக் கருதி தேள்காடி தேள்கடி என்று மாற்றப்பட்டது. அந்தப் பாடலைத் திரும்பத் திரும்ப படிக்கும்போது தான் தேளைத் தவிர வேறு ஒரு விஷம் கொண்ட உயிரியைக் குறிப்பிட்டிருப்பதை உணர முடிந்தது. தேள்கடி அல்ல, அது தேள்காலி அதாவது தேள் மற்றும் 'நட்டுவாக்காலி' என்பதே பொருந்த அமைந்தது.

இப்படி, திருத்தம் பெற்ற இடங்கள் பலவாகும். எல்லா வற்றையும் சொல்வது பக்க நீட்சிக்கு வழி வகுக்கும் என்பதால் இத்துடன் அமைவோம்.

**தற்பெருமை வாதிகள்**

பெரும்பாலான சித்தர்கள் தங்கள் இலக்கியங்களில் தற்பெருமை கூறும் பாடல்களைப் படைத்துக்கொள்வார்கள். தன்னைவிட்டால் யாரும் இல்லை என்பதும், நானே பெரியவன் என்பதும், என்னைப் போல் இந்த மருத்துவத்தை யாரும் சொன்னதில்லை என்பதும் அவர்கள் சொல்லும் கருத்தாக அமையும். ஆனால் இந்நூலில் புலிப்பாணியார் அவ்வாறு கூறவில்லை. மாறாக பெரியோர்களை மதித்துப் போற்றுகின்றார். சில பாடல்களில் போகரின் கடாட்சத்தால் நான் இந்நூலைப் படைத்தேன் என்று கூறுகின்றார்.

பல பாடல்களில் இவரின் தன்னடக்கம் வெளிப்படுகின்றது. என் மருந்தைத் தவிர வேறு மருந்தே இல்லை என்று கூறும் சித்தர் மத்தியில் வண்டு கடிக்கு (பாடல் 43) மருந்து சொல்கிறவர் சில மருந்துகளைச் சொல்கிறார். அம்மருந்துகளில் குணமாகாவிட்டால் விஷக்கடிகளுக்குப் பொதுவாகத் தரும் இரசப் பதங்கத்தை வழங்குங்கள் என்று கூறுகிறார்.

### ஆசிரியரின் மனநிலை

இந்த ஓலைச் சுவடியைப் படியெடுத்தவர் காப்புப் பாடலை எழுதாமல் விட்டுவிட்டார். அந்தாதி முறையில் பாடல்கள் அமைந்துள்ளன.

எண் 1 என்று குறிக்கப்பட்டுள்ள முதல் பாடல் **'காப்பாக'** என்று தொடர்கின்றது. எனவே முதல் பாடல் காப்புப் பாடலாக இருந்து **'காப்பே'** என்று முடிந்திருக்க வேண்டும். எனவேதான் இரண்டாம் பாடல் **'காப்பாக'** எனத் தொடங்குகின்றது. முதல் பாடல் விடப்பட்டதால் இரண்டாம் பாடலை 1 என்று குறிப்பிட்டுள்ளார் போலும்.

அந்தாதி என்பது அந்தமே ஆதியாக அமைவது. அதாவது முதற்பாடலின் முடிவு சொல் அடுத்த பாடலின் தொடக்கமாக அமையும். ஏடுகளும், எழுதுபொருட்களும் அரிதாக இருந்த காலத்தில் மனனம் செய்தே நூல்களைக் கற்கவேண்டியிருந்தது. எனவே இந்த அந்தாதி முறை மிகவும் பயனுடையதாக அமைந்தது.

பாடல்கள் சரியாக இருக்கின்றனவா என அறியவும். இந்த அந்தாதி முறை பெரிதும் துணை நிற்கும்.

அந்த அந்தாதி முறையை வைத்துப் பார்க்கும்போது இடையிடையே சில பாடல்கள் விடுபட்டிருக்கிறதோ என சந்தேகிக்க இடமுள்ளது.

பாடல் 12 போகும் என்று முடிகிறது. ஆனால் பாடல் 13 போகவே என்றோ வேறு முறையிலோ அமையாமல் விளங்கவே என்று அமைந்துள்ளது. மேலும் 29-ஆம் பாடல் கூட்டலாம் என்று முடிகிறது. ஆனால் பாடல் 30, பாரே நீ என்று தொடர்கிறது. மேலும் திண்ணந்தானே என்று முடியும் பாடல் 31, பாரப்பா

என்று அடுத்த தொடர்ச்சியாக அமைகிறது. பாடல் 78 போகர் கடாட்சத்தாலே என அமைய ஆனால் பாடல் 79 என்னவே என்று தொடங்குகின்றது. இவை எல்லாம் நாம் மேற்சொன்ன 'இடையில் பாடல்கள் விடுபட்டுள்ளன' என்ற கருத்திற்கு வளம் சேர்ப்பனவாக அமைகின்றன.

ஆனால் விடுபட்டதாகக் கருதப்படும் பாடல்கள் நூல் தொடர்ச்சிக்குக் குறுக்கிடாமல் அமைந்துள்ளதால் மருத்துவ முறைகள் தடைபடாமல் செல்கின்றது. பொருள் விளங்காத சொற்கள் சில உடுக்குறியிட்டுப் பதிப்பிக்கப் பட்டுள்ளன.

நாம் முன்னமே சொன்னதைப் போன்று சுவடியைப் படித்துப் பதிப்பிப்பது கடினமான பணி. முதன்முதலாக அச்சேறும் இந்தச் சுவடி பொருள் முழுமை பெற்றுவிட்டது என்று கூறவியலாது. முதல் முயற்சி என்பதால் பிழைகள் நேர்ந்திருக்கக் கூடும்.

எனவே இதில் பிழைகள் ஏதுமிருப்பின் அதனைச் சுட்டிக் காட்டி அடுத்துவரும் பதிப்புகளில் அவை திருத்தம் பெற ஆன்ற விந்தடங்கிய சான்றோர் பெருமக்கள் உறுதுணை செய்வாராக.

# பொருளடக்கம் - அகரமுதலி


| வ.எண். | பாடல் பொருள் | பாடல் எண். |
|---|---|---|
| 1. | இடிவல்லாதி | 86 |
| 2. | இரசகெந்தி மெழுகு | 91 |
| 3. | இறையியல் கருத்துகள் | 65 |
| 4. | உஷ்ண காங்கைக்குக் குடிநீர் | 105 |
| 5. | எலிக்கடி பதினெட்டுக்கும் மருந்து | 37 |
| 6. | காது வலிக்குத் தைலம் | 13 |
| 7. | கிரந்தி அரையாப்பிற்கு எண்ணெய் | 61 |
| 8. | குட்டத்திற்குக் குழித்தைலம் | 50 |
| 9. | குடைச்சலுக்குத் தைலம் | 107 |
| 10. | குன்மம் ஆறுக்கும் உப்பு | 9 |
| 11. | சகல விஷத்திற்கு மருந்து | 47 |
| 12. | சகல இரணங்களுக்கும் களிம்பு | 17 |
| 13. | சன்னிக்கு எண்ணெய் | 24 |
| 14. | சன்னிக்கு மேல் பூசத் தைலம் | 5 |
| 15. | சன்னி மயக்கத்திற்குக் கலிக்கம் | 20 |
| 16. | சிறு பாம்பு கடிக்கு மருந்து | 49 |
| 17. | சுரக்குளிகை | 1 |
| 18. | சூட்டிற்குக் குடிநீர் | 102 |

| | | |
|---|---|---|
| 19. | சூலை வாய்விற்கு, மேகத்திற்குத் தைலம் | 79 |
| 20. | செங்கிரந்தி தடிப்பிற்குக் குடிநீர் | 77 |
| 21. | தந்த வியாதிக்குப் பொடி | 15 |
| 22. | தேள் விஷத்திற்கு மருந்து | 46 |
| 23. | நஞ்சுண்டவர்க்கு மருந்து | 54 |
| 24. | நாய், நரி கடிகளுக்கு உள்ளுக்கும், மேலுக்கும் மருந்து | 39 |
| 25. | நீர் எரிச்சலுக்கு மருந்து | 85 |
| 26. | நீரடைப்பிற்கு மருந்து | 12 |
| 27. | நீரில் இரத்தங் கண்டால் மருந்து | 31 |
| 28. | பித்த வெடிப்பிற்கு மருந்து | 30 |
| 29. | பிரமைக்கு அண்ட பற்பம் | 55 |
| 30. | பிரமேகத்திற்கு எண்ணெய் | 81 |
| 31. | பூரான் கடிக்கு மருத்துவம் | 44 |
| 32. | பூனைக் கடிக்கு மருத்துவம் | 40 |
| 33. | பெரும்பாட்டிற்கு மருந்து | 8 |
| 34. | மருந்தீட்டிற்கு எண்ணெய் | 52 |
| 35. | மருந்தீட்டிற்கு முறிவு | 83 |
| 36. | முகச் சன்னிக்கு எண்ணெய் | 22 |
| 37. | மூல நோய்க்குச் சூரணம் | 59 |
| 38. | மூல முளைக்கு மருந்து | 99 |

| | | |
|---|---|---|
| 39. | வண்டு கடிக்கு மருந்து | 41 |
| 40. | வயிற்றிரைச்சல், பேதிக்கு மருந்து | 112 |
| 41. | வயிற்றிரைச்சல், இரத்தக் கடுப்பிற்கு | 113 |
| 42. | வாய்விற்குக் கியாழம் | 32 |
| 43. | வாய்விற்கு மருந்து | 100 |
| 44. | விக்கலுக்குப் புகை | 19 |
| 45. | விஷத்திற்கு நசியம், கலிக்கம் | 48 |

**பின்னிணைப்புகள்**

| | | |
|---|---|---|
| 1. | பாடல் முதல் குறிப்பகராதி | 50 |
| 2. | நோய் அகர முதலி | 51 |
| 3. | மருந்து சரக்குகளின் அகரவரிசை | 53 |

**நூல் விலைப்பட்டியல்**

# புலிப்பாணி வைத்தியம்

### சுரக் குளிகை

காப்பாகச் சுரக்குளிகை சொல்லக் கேளு
கருவான கௌரியிது விராக னைந்து
சேப்பாக மிளகதுவு மதிலே பாதி
திறமான உளுந்தது மிதுநே ரப்பா
வேப்பாக இருசரக்கு கல்வத்தி லிட்டு
விதமாக எருக்கம்பால் தன்னா லாட்டி
பாப்பாகக் கௌரிக்குக் கவசம் செய்து
பாங்காக ரவிமுகத்தில் வைத்தி டாயே! 1

மிளகு 10 கி., உளுந்து 10 கி. இவற்றைக் கல்வத்திலிட்டு எருக்கம்பால் சேர்த்து ஆட்டி, 20 கி. கௌரிக்குக் கவசம் செய்து வெயிலில் காய வைக்கவும்.

வைத்தவுடன் எடுத்துவந்து துணிமேல் சுற்றி
வகையாக வெள்ளாவி தன்னில் வைத்து
கைத்தவுடன் எடுத்துப்பின் கவசம் வாங்கி
கனமான அமுரியினால் கழுவிப் போட்டு
செத்தவுடன் ரவிதனிலே கடிகை வைத்து
செயலான கல்வத்தி லிட்டு நீயும்
உய்த்தவுடன் பாச்சானை வாட்டி தண்ணீர்
உத்தமனே நால்சாமம் அரைத்துத் தீரே! 2

காய்ந்த பின்னர் கௌரியை எடுத்து துணி சுற்றி வெள்ளாவி வைக்கவும். ஆறியபின் எடுத்துக் கவசம் களைந்து அமுரியில் கழுவி எடுத்துக் கொள்ளவும். 24 நிமிடங்கள் வெயிலில் வைத்து, பின் கல்வத்திலிட்டு வாட்டிய திருகுகள்ளி சாறுவிட்டு 12 மணி நேரம் அரைத்துக் கொள்ளவும்.

தேரேநீ குளிகையது சிறுபயிறு போல
திறமாக உண்டைசெய்து நிழலி லுலர்த்தி

---

ரவி - வெயில், அமுரி - மூத்திரம், பாச்சான் - கள்ளி

*சேரேநீ சிமிழ்தனிலே அடைத்துக் கொண்டு*
*செகத்திலுள்ள மனிதருக்கு சுரத்துக் கெல்லாம்*
*பாரேநீ சுக்குடைய கியாழந் தன்னில்*
*பண்பாகக் குளிகையொன்று கொடுத்துப் பாரு*
*வீரேநீ மூன்றுபகல் கொடுக்கும் போது*
*விதமான நூல்முறையின் சுரங்கள் போமே!* 3

இதனைச் சிறுபயிறளவு (32 மி.கி.) உருண்டை செய்து நிழலில் உலர்த்திச் சிமிளில் அடைத்துக் கொள்ளவும். சுரம் கண்டோர்க்குச் சுக்குக் குடிநீரில் தினம் ஒரு குளிகை வீதம் 3 நாள் கொடுத்துவர சுரம் நீங்கும்.

*போமேநீ பத்தியமா மாறுநாள் காரு*
*பொங்கமுடன் வெந்நீரு சாத மாகும்*
*ஆமேநீ மற்றொன்று மாகா தப்பா*
*அடவாக ஏழாநாள் சலத்தை வாரு*
*நாமேநீ மிளகுடனே சிறுகீரை வேரும்*
*நலமாகக் கியாழம்வைத்து கொள்ளச் சொல்லு*
*போமேநீ பத்தியந்தான் முறிக்கச் சொல்லி*
*புனிதமுடன் மற்றநாள் எல்லாஞ் சேரே!* 4

ஆறுநாள் பத்தியம் காக்க வேண்டும். சாதத்தை நன்றாகப் பொங்க வைத்து வெந்நீர் சாதம் சாப்பிடவும். வேறு எதனையும் சாப்பிடலாகாது. ஏழாம் நாள் தலைக்குக் குளிக்கலாம். மிளகும் சிறுகீரை வேரும் சேர்த்துக் குடிநீர் வைத்துக் குடித்து பத்தியத்தை முறிக்கச் சொல்லலாம். பிறகு மற்ற பொருட்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

## சன்னிக்கு மேல் பூசத்தைலம்

*சேரேநீ சன்னிக்குத் தயில மொன்று*
*செப்புகிறேன் புலிப்பாணி விளக்க மாக*
*வீரேநீ வேப்பெண்ணெய் படிதா னொன்று*
*விதமான கார்த்திகையின் கிழங்கு தண்ணீர்*
*பாரேநீ படிதண்ணி ரளந்து வாரு*
*பாங்கான கருநாபி விராக னொன்று*

*கூரேநீ வசநாபி விராக னைந்து*
*கொடிதான வெள்ளுள்ளி விராக னஞ்சே!* 5

வேப்பெண்ணெய் 1.3 லி., கார்த்திகைக் கிழங்குநீர் (கலப்பைக் கிழங்கு) 1.3 லி., கருநாபி 4 கி., வசநாபி 20 கி., வெள்ளைப் பூண்டு 20 கி இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

*அஞ்சான காய மது விராக னொன்று*
*அப்பனே ஓமமது விராக னைந்து*
*தஞ்சான சதகுப்பை விராக னைந்து*
*சாதிக்காய் வெண்தோன்றி விராகன் பத்து*
*பஞ்சான இதையெல்லாம் கிழங்கு நீரில்*
*மைந்தனே மைபோல அரைத்துப் போடு*
*சஞ்சான எண்ணெயிலே கலக்கிக் கொண்டு*
*சாந்தமாம் கடுகுபதம் தன்னில் வாங்கே!* 6

பெருங்காயம் 4 கி., ஓமம் 20 கி., சதகுப்பை 20 கி., சாதிக்காய், ஆகாசக் கருடன் எனும் வெண்தோன்றி இரண்டும் வகைக்கு 40 கி, இவற்றை எல்லாம் கார்த்திகைக் கிழங்கு நீரில் (கலப்பைக் கிழங்குநீர்) மைபோல் அரைத்து மேற்சொன்ன எண்ணெயில் கலக்கிக் கொண்டு அடுப்பேற்றி எரித்து, கடுகு பதத்தில் இறக்கிக் கொள்ளவும்.

*வாங்கியே எண்ணெய்பூச சன்னி போகும்*
*வகையான குடைச்சல்முதல் வாதம் போகும்*
*பாங்கியே உள்ளுக்குக் கொள்ளும் போது*
*பாங்காக மஞ்சளிட்டு சாண மிட்டு*
*தாங்கியே நீரிட்டுக் கழுவிப் போடு*
*தயவாக இந்தஎண்ணெய் உறுதி மெத்த*
*ஏங்கியே அலையாதே அப்பா சொன்னேன்*
*இதமாக வயித்தயந்தா னின்னங் கேளே!* 7

இந்த எண்ணெயை உடம்பில் பூசி வர சன்னிநோய் குணமாகும். குடைச்சல் முதலான வாதங்கள் நீங்கும். இந்த எண்ணெ உள்ளுக்கும் வழங்கலாம். இம்மருந்துண்ணும் காலத்தில் வீட்டைச் சாணமிட்டு மெழுகி மஞ்சள் தெளித்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

## பெரும்பாட்டிற்கு மருந்து

*ஆமேநீ பெரும்பாடு வந்த பேர்க்கு*
*அடவாக நாவல்பட்டை எருமை மோரில்*
*தாமேநீ துவைத்திடித்துப் பிழிந்து கொண்டு*
*தயவாகச் சந்தனந்தான் விராக னைந்து*
*நாமேதான் புளித்தமோர் தன்னில் கலக்கி*
*நாயகனே கொடுத்துவிடு நாள்மூன் றப்பா*
*வீமேநீ பெரும்பாடு எங்கே போச்சு*
*விதமாகப் பத்தியந்தா னில்லை தானே!* 8

நாவல்பட்டையை எருமைமோர் சேர்த்துத் துவைத்து இடித்துப் பிழிந்து கொள்ளவும். சந்தனத்தூள் 20 கி., புளித்த மோருடன் சேர்த்துக் கலக்கி மூன்று நாள் கொடுத்து வர பெரும்பாடு நீங்கும். இதற்குத் தனியே பத்தியம் ஏதுமில்லை.

## குன்மம் ஆறுக்கும் உப்பு

*தானேநீ குன்மம்வகை ஆறும் தீர*
*தயவாக உப்பொன்று சொல்லக் கேளு*
*மானேநீ உப்பதுவும் படிதா னொன்று*
*மைந்தனே எருமைமோர் படிதா னொன்று*
*வானேநீ வரிக்குமட்டி சாறு நாழி*
*வகையான இந்துப்பு வெடியுப் போடு*
*தேனேநீ சவுட்டுப்பு வளைய லுப்பு*
*தெளிவான வகைவகைக்கு விராக னொன்றே!* 9

குன்ம நோய் வகை ஆறுக்கும் உப்பு சொல்லப்படுகின்றது. உப்பு, எருமைமோர், வரிக்கும்மட்டிச்சாறு வகைக்கு 1.3 லி., இந்துப்பு, வெடியுப்பு, சவுட்டுப்பு, வளையலுப்பு இவை வகைக்கு 4 கி. சேர்த்தெடுத்துக் கொள்ளவும்.

*ஒன்றான இதையெடுத்து பாண்டத் திட்டு*
*உத்தமனே மோருடனே சாறும் விட்டு*
*நன்றாக அக்கினியில் எரிக்கும் போது*
*பதறாம லுப்பதுசர்க் கரைபோ லாகுங்*

*குன்றாகப் பாண்டத்தி லெடுத்து லர்த்தி*
*குணமாக உதையாதி அன்ன நீரில்*
*நன்றாக விராகனிடை உப்பு ரண்டு*
*நலமாகத் தான்போட்டு கொடுத்தி டாயே!* 10

ஒரு பாத்திரத்தில் மோர் மற்றும் சாறுகளை விட்டு உப்புகளை அதில் சேர்த்து எரிக்க உப்பு சர்க்கரை போலாகும். இதனைத் தனியே ஒரு பாத்திரத்தில் ஊற்றி உலர வைக்கவும். விடியற் காலையில் நீராகாரத்தில் சிறிது உப்பிட்டு இதனைச் சேர்த்து வழங்கவும்.

*கொடுத்திடுவாய் மண்டலந்தா னிந்த விதம்*
*குணமாக அவரவர்க்கு நாள்தான் தள்ளு*
*தொடுத்திடுவாய் வாய்வென்ற கட்டி போகுந்*
*தொந்திப்பு சோகைபோகும் பொருமல் தீரும்*
*படுத்திடுவாய் கவிச்சையோடு கிரிச்ச னங்கள்*
*பாழான கெண்டைமுதல் பறந்து போகுங்*
*கடுத்திடுவாய் அகுவையென்ற கட்டி போகுங்*
*கடலான உப்புடைய திறந்தான் காணே!* 11

இதுபோன்று தொடர்ந்து 40 நாட்கள் வழங்கிவர இந்நோய் குணமாகும். சிலர்க்கு இன்னும் சில நாட்கள், நோய் குணமாகும் வரை சேர்த்துச் சாப்பிடலாம். மேலும் வாயு, தொந்தம், சோகை, பொருமல், கவிச்சை, கிரீச்சனங்கள், கெண்டைவலி, அகுவை எனும் கட்டி போன்ற நோய்களைக் குணமாக்கும் பண்பு இவ்வுப்பிற்கு உண்டு.

## நீரடைப்பிற்கு மருந்து

*கானென்ற நீரடைப்பு கண்ட பேர்க்கு*
*கனிவாக வாழையுட கிழங்கைத் தோண்டி*
*ஊணேநீ மற்றநாள் பார்க்கும் போது*
*உத்தமனே வாழையுள்ள தண்ணீர் நிற்கும்*
*வீணேநீ போகாமல் கிழங்கு தண்ணீர்*
*விதமாக அரைப்படிதா னெடுத்து வந்து*
*பூணேநீ வெடியுப்பு விராகன் ரண்டு.*
*போட்டதிலே கொடுக்கநீர்க் கட்டுப் போகும்!* 12

வாழைக் கிழங்கைத் தோண்டி எடுத்து அதில் தேங்கி நிற்கும் தண்ணீரை 675 மி.லி. சேகரித்து எடுத்து அதனுடன் 8 கி வெடியுப்புச் சேர்த்து வழங்கினால் நீரடைப்பு நீங்கி, நீர் எளிதில் பிரியும்.

### காது வலிக்குத் தைலம்

*விளங்கவே காதிலுத்த நோய்த னக்கு*
*விதமான மரமஞ்சள் வெள்ளைப் பூண்டு*
*அளங்கவே சுக்கோடு வலம்புரியின் காயும்*
*அடவான கரியசீ ரகத்தி னோடு*
*முளங்கவே நண்டிறைச்சி நத்தை யோடு*
*முசுறுமுட்டை கருங்கோழி முட்டை யோடு*
*புளங்கவே இவையெல்லாம் விராகன் ஒன்று*
*புதுமையிலே கள்ளிப்புனல் முருங்கைச் சாறே!* 13

மரமஞ்சள், வெள்ளைப்பூண்டு, சுக்கு, வலம்புரிக்காய், கருஞ்சீரகம், நண்டின் இறைச்சி, நத்தையின் ஓடு, முசுறுமுசுட்டை, கருங்கோழிமுட்டை இவை வகைக்கு 4 கி சேகரித்து அதனுடன் கள்ளிப்பால், முருங்கைச் சாற்றையும் சேர்த்துக் கொள்ளவும்.

*சாறென்ற வகைக்குவகை படிதான் வீதம்*
*சார்வான பசுவின்நெய் படிதான் நாலு*
*வாறென்ற வேப்பெண்ணெய் படிதான் காலு*
*வளமாக விட்டெரித்து காதி லூற்றி*
*பானென்ற பஞ்சுகொண்டு மூடச் சொல்லு*
*பாங்காக ஈராறு நாள்தான் வாரு*
*கூறென்ற காதிலுள்ள வியாதி யெல்லாம்*
*குணமாகும் போகருட கடாட்சந் தானே!* 14

சாறுகளை வகைக்கு 1.3 லி வீதம் எடுத்துப் பசுவின் நெய் 5.2 லி., வேப்பெண்ணெய் 330 மி.லி. எடுத்து இவற்றையும் ஒன்று சேர்த்துக் கலந்து அடுப்பேற்றி எரித்து வடிக்கவும். ஆறியபின் காதில் சிறிதளவு ஊற்றி பஞ்சு வைத்து மூடிவிட வேண்டும். இவ்வாறு 12 நாட்கள் தொடர்ந்து காதிலிட்டு வந்தால் காது நோய்கள் எல்லாம் நீங்கும்.

### தந்த வியாதிக்குப் பொடி (பல்வலி)

*தானேதான் தந்தமென்ற வியாதிக் கப்பா*
*தயவான அரப்பொடியும் பலந்தா னொன்று*
*வேணேதான் பீங்கானில் போட்டுக் கொண்டு*
*விதமாக காயும் தான்றிக் காயும்*
*பாணேதான் மாசிக்காய் சீனக் காரம்*
*பண்பான கொறுக்காயின் புளியுங் கூட*
*காணேதான் துருசுடனே காசுக் கட்டி*
*கணக்காக வகைவகைக்கு விராகன் மூன்றே!* 15

இரும்புத்தூள் 35 கி எடுத்துப் பீங்கானில் இட்டு தான்றிக்காய், மாசிக்காய், சீனக்காரம், கொடுக்காய்ப் புளி, துருசு, காசுக்கட்டி இவை வகைக்கு 12 கி வீதம் எடுத்துக்கொள்ள வேண்டும்.

*மூன்றாக இவையெல்லாம் பொடித்துப் போட்டு*
*முளைஎலுமிச் சம்பழத்தின் சாறு விட்டு*
*நன்றாக வற்றுமட்டும் ரவியில் வைத்து*
*நலமாக அம்மியிலே அமைத்தி டப்பா*
*பன்றாகப் பழச்சாற்றில் மைபோ லாட்டி*
*பண்பாகப் பொடியாக்கி வைத்துக் கொண்டு*
*கன்றாக அனுதினமும் விளக்கி வரநீ*
*கொடிதான பல்ரோக மோடிப் போமே!* 16

இவற்றைப் பொடித்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு வெயிலில் வைத்து சாறு வற்றியபின் எடுத்துப் பின் பழச்சாற்றில் மைபோலாட்டி பொடியாக்கி வைக்கவும். அதனைக் கொண்டு பல்துலக்கி வர பல்நோய்கள் ஓடிப்போகும்.

### சகல இரணங்களுக்கும் களிம்பு

*தானப்பா களிம்பொன்று சொல்லக் கேளு*
*தயவான லிங்கமுடன் மிருதார் சிங்கி*
*ஊணப்பா ரசகற்பூ ரத்தி னோடு*
*உத்தமனே வெள்ளையென்ற குங்குலி யந்தான்*

*கோணப்பா கடுக்காயும் மாசிக் காயும்*
*குணமான காசுக்கட்டி தான்றிக் காயும்*
*வாணப்பா ஓரிடையாய்க் கல்வத் திட்டு*
*வகையாகத் தானரைக்க விபரங் கேளே!* 17

இலிங்கம், மிருதார்சிங்கி, இரசகற்பூரம், வெள்ளைக் குங்கிலியம், கடுக்காய், மாசிக்காய், காசுக்கட்டி, தான்றிக்காய் இவற்றைச் சம அளவெடுத்து கல்வத்திலிட்டு அரைத்துக் கொள்ள வேண்டும்.

*கேளேநீ பசுவினுட வெண்ணெய் போட்டு*
*கெணிதமாய் ஒருசாமம் அரைத்த பின்பு*
*சூளேநீ தண்ணியிலே மிதக்க வைத்து*
*சுகமாக மற்றநாள் எடுத்துக் கொண்டு*
*கேளேநீ சூலையப்பா ரணத்தில் பூச*
*கெடிதான ரணங்களெல்லா மாறிப் போகும்*
*கேளேநீ களிம்பதுவும் சுருக்கு மெத்த*
*விதமாக இன்னமொன்று விளம்பக் கேளே!* 18

இவற்றுடன் பசுவெண்ணெய் சேர்த்து மூன்று மணிநேரம் அரைத்துக் கொள்ளவும். அதனை உருட்டி தண்ணீரில் மிதக்கவிட்டு அடுத்தநாள் எடுத்துக் கொள்ளவும். இந்தக் களிம்பைச் சூலை இரணத்தின் மீது பூசினால் இரணங்கள் ஆறிடும்.

## விக்கலுக்குப் புகை

*விளம்புவேன் விக்கலுக்குச் சொல்லக் கேளு*
*விதமாக சந்தனத்தின் கட்டை யோடு*
*தளம்புவேன் சாம்பிராணி சமனாய்ச் சேர்த்து*
*தயவாகப் பொடிபண்ணிக் காயி தத்தில்*
*குளம்புகிறேன் சுருட்டியதைப் புகைப்பி டித்து*
*குணமாக விக்கலது தீரும் பாரு*
*விளம்புகிறேன் இன்னமொன்று சொல்லக் கேளு*
*விதமாக கலிக்கமொன்று சொல்லு வேனே!* 19

இதில் விக்கலுக்கு மருந்து சொல்கிறேன். சந்தனக் கட்டை இழைத்து அதனுடன் சாம்பிராணி சமனாய்ச் சேர்த்துப் பொடி செய்து காகிதத்தில் சுருட்டி அதைப் புகை பிடித்தால் விக்கல் குணமாகும். மற்றொரு கலிக்கம் ஒன்று சொல்வேன்.

**சன்னி, மயக்கத்திற்குக் கலிக்கம்**

*சொல்லுவேன் கிராம்போடு மிளகு சுக்கு*
*சுகமான வரையென்ற பருப்புக் கூட்டி*
*வெல்லுவேன் இவையெல்லாம் விராக னொன்று*
*விதமாக அகத்தியனார் குழம்பைக் கேளு*
*சொல்லுவேன் விராகனது கால்தான் கூட்டி*
*சுகமான மேனிச்சார் தன்னா லாட்டி*
*மல்லுவேன் வெற்றிலையின் சாற்றா லாட்டி*
*மைந்தனே கயிறதுபோல் வைத்துக் கொள்ளே!* 20

கிராம்பு, மிளகு, சுக்கு, துவரம் பருப்பு இவை வகைக்கு 4 கி., அகத்தியர் குழம்பு 1கி. சேர்த்து குப்பை மேனிச்சாற்றால் ஆட்டி, பின்னர் வெற்றிலைச் சாற்றாலாட்டி அதனைக் கயிறு போல் திரித்துக் கொள்ளவும்.

*கொள்ளடா முருங்கையிலைச் சாற்றில் தேய்த்து*
*குணமாகக் கண்ணிலே போட்ட போது*
*மெள்ளடா சன்னிமுதல் பிசாசு போகும்*
*மென்மையாய் விஷமோடு மயக்கம் போகும்*
*விள்ளடா போகருட கடாட்சத் தாலே*
*விளம்பினேன் புலிப்பாணி விளக்க மாக*
*கள்ளடா மனத்தோர்க்கு காட்டொ ணாது*
*கருவான வயித்தியந்தா னின்னங் கேளே!* 21

இதனை முருங்கை இலைச்சாற்றில் இழைத்துக் கண்ணில் பிழியவும். இதனால் சன்னி முதலான கொடிய நோய்களும், விஷம், மயக்கம் போன்றவையும் நீங்கும் என்பதை, போகரின் கடாட்சத்தாலே புலிப்பாணி ஆகிய நான் சொல்கிறேன். இதனைக் கண்டவர்க்கும் சொல்லாமல் கவனமாகக் காத்துக் கொள்ளவும்.

### முகசன்னிக்கு எண்ணெய்

*கேளேநீ முகசன்னி நோய்க்கெண்ணெ யொன்று*
*கெணிதமுடன் தேங்காய்நெய் படிதா னொன்று*
*சூளேநீ வசம்பினொடு வெள்ளைப் பூண்டு*
*சுகமாக ஓமமொடு சதமாங் குப்பை*
*வாளேநீ வகைவகைக்கு விராகன் பத்து*
*வளமான பெருங்காயம் விராக னொன்று*
*ஆளேநீ மாவிலிங்கம் ஆலின் பட்டை*
*அப்பனே நொச்சியோடு பெருமரமு மாமே!* 22

முகசன்னி நோய்களுக்கு எண்ணெய் சொல்லப்படுகிறது. தேங்காய் எண்ணெய் 1.3 லி, வசம்பு, வெள்ளைப் பூண்டு, ஓமம், சதகுப்பை இவை வகைக்கு 40 கி, பெருங்காயம் 4 கி, மாவிலிங்கம், ஆலம்பட்டை, நொச்சிப்பட்டை, பெருமரப்பட்டை போன்றவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்.

*ஆமேநீ பட்டைவகை சொல்லக் கேளு*
*அடவாக வகைவகைக்கு விராகன் பத்து*
*தாமேநீ இவையெல்லாம் இடித்து மைந்தா*
*தயவாகச் சரக்கெல்லாம் பொடியாய்ப் பண்ணி*
*வேமேநீ எண்ணெயிலே போட்டுக் காய்ச்சி*
*விதமான கடுகுபதந் தன்னில் வாங்கி*
*போமேநீ முழுகிடவே பறக்குஞ் சன்னி*
*பொங்கமுடன் நாள்விட்டு நாள்தான் மூழ்கே!* 23

ஒவ்வொரு வகைப் பட்டையும் 40கி. அளவு எடுத்து முன்சொன்ன பொருட்களுடன் சேர்த்து இடித்து சரக்கெல்லாம் பொடியாக்கி எண்ணெயில் இட்டுக் காய்ச்சி கடுகு பதமாக வரும்போது இறக்கிக் கொள்ளவும். இவ்வெண்ணெய் தேய்த்து ஒரு நாள் விட்டு ஒருநாள் மூழ்கிவர சன்னிநோய் நீங்கும்.

### சன்னிக்கு எண்ணெய்

*முழுகிவர எண்ணெயொன்று சொல்லக் கேளு*
*முறிந்தோடு சன்னியப்பா எண்ணெய் கண்டால்*

*பழுப்பான வேப்பெண்ணெய் படிதா னொன்று*
*பண்பான சிறுபானை தன்னில் வார்த்து*
*அழுக்கான மயிர்ப்பீலி இலைதான் பத்து*
*அப்பனே நறுக்கிநன்றா யதனில் போட்டு*
*கழுக்கான சூடனொடு சாம்பி ராணி*
*சுக்கோடு திப்பிலியு மரத்தை கூட்டே!* 24

சுத்தமான வேப்பெண்ணெய் 1.3லி, எடுத்து சிறிய பானையில் வார்த்து மயிர்ப்பீலி இலை 10-ஐ நறுக்கி அதனுடன் சேர்க்கவும். சூடன், சாம்பிராணி, சுக்கு, திப்பிலி, அரத்தை இவற்றையும் வகைக்கு 4 கி. பொடித்துச் சேர்த்துக் கொள்ளவேண்டும்.

*கூட்டப்பா பெருங்காய மோமத் தோடு*
*குணமான கிராம்பப்பா மிளகு கூட*
*நாட்டப்பா ரசகற்பூ ரத்தி னோடு*
*நலமான தேசவரஞ் சதமாங் குப்பை*
*கூட்டப்பா இவையெல்லாம் பொடியாய்ப் பண்ணி*
*குணமான சீலையிலே முடிந்து கொண்டு*
*சாட்டப்பா வகைவகைக்கு விராக னொன்று*
*சாதகமாய் அடுப்பேற்றித் தீயை மூட்டே!* 25

மேலும் இதனுடன் பெருங்காயம், ஓமம், கிராம்பு, மிளகு, இரசகற்பூரம், தேசாவரம், சதகுப்பை, வகைக்கு 4கி, எடுத்துப் பொடியாக்கி நல்ல வெள்ளைத் துணியில் முடிந்து எண்ணெயில் விட்டு அடுப்பேற்றித் தீமூட்டி எரித்துக்கொள்ளவும்.

*மூடப்பா சிறுசட்டி கொண்டு மூடி*
*முக்கியமாய்க் குப்பறவே மூட்ட வேண்டும்*
*காட்டப்பா அக்கினியை எரித்த போது*
*கடிதாக எண்ணெயிலே தீயே பற்றும்*
*மாட்டப்பா அதையிறக்கி வைத்த போது*
*மைந்தனே சுடர்காட்ட பற்றும் பாரும்*
*மூட்டப்பா சட்டிகொண்டு மூடும் போது*
*முக்கியமடா தனலடங்கி வாச மாமே!* 26

எண்ணெயை அடுப்பேற்றித் தொடர்ந்து எரிக்கும்போது எண்ணெயில் தீப்பிடிக்கும். அதை இறக்கி வைத்து சுடர் காட்டினாலும் தீ பற்றிக்கொள்ளும். சட்டி கொண்டு மூடினால் அனல் அடங்கி வாசனை உண்டாகும்.

*ஆமேநீ அடுப்பைமிக அணைத்துப் போடு*
*அப்பனே ஆறவிட்டு இறக்கி வைத்து*
*தாமேநீ சட்டியிலே வடித்துக் கொள்ளு*
*தயவான இஞ்சிச்சாறு படியுங் கால்தான்*
*வேமேநீ வெள்ளுள்ளி தயில மப்பா*
*விதமாகக் கால்படிதா னளந்து வாரு*
*போமேநீ அண்டத்தில் தயில மப்பா*
*பொங்கமுடன் படிவீச மதிலே வாரு!* 27

எண்ணெய் ஆறியபின் சட்டியில் வடித்துக் கொள்ள வேண்டும். 330 மி.லி இஞ்சிச்சாறு எடுத்து அதனுடன் பூண்டுத் தைலம் 330 மி.லி, அண்டத் தைலம் 165 கி சேர்த்துக்கொள்ளவும்.

*வாரேநீ சுக்கப்பா விராக னாறு*
*வகையாகச் சலமதுதான் படிதா னாலு*
*சீரேநீ பொடிபண்ணி கியாழம் வைத்து*
*சிறப்பாகக் கால்படிதா னதிலே வாரு*
*பாரேநீ ஒட்டடைத்தூள் கழஞ்சு ஒன்று*
*பாங்காக அடுப்பேற்றித் தீயை மூட்டி*
*கூரேநீ கடுகுபதந் தன்னி லிறக்கி*
*குணமாகக் கலசத்தில் வார்த்தி டாயே!* 28

சுக்குத்தூள் 24கி, 5.2 லி தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைத்து முறைப்படி குடிநீராக்கிக் கொள்ள வேண்டும். இதில் 330 மி.லி அளவு, குடிநீரை மேலே சொன்ன பொருட்களுடன் சேர்த்து, இவற்றுடன் ஒட்டடைத்தூள் 5 கி சேர்த்து எரித்து கடுகு பதத்தில் இறக்கி கலயத்தில் ஊற்றிப் பாதுகாத்துக்கொள்ளவும்.

*வார்த்தவுடன் கணபதியைத் துதித்துப் பாடி*
*வகையாகச் சோடசமுந் தூபஞ் செய்து*

*பார்த்தவுட னுள்ளுக்குக் கொடுத்த போது*
*பாங்கான சன்னிமுதல் வலிப்பு தோஷம்*
*காத்தவுடன் மூன்றுநாள் கொடுக்கும் போது*
*காரடா பத்தியந்தா னொன்று மாகா*
*சேர்த்தவுடன் ஏழாநாள் நீரை வார்த்து*
*செயலான உப்புமுதல் கூட்ட லாமே!* 29

மூதாதையர்களை வணங்கி கணபதியைத் துதித்துப்போற்றி தூபதீபம் காட்டி இத்தைலத்தை மூன்று நாட்கள் சாப்பிட்டு வந்தால் சன்னி நோய்கள், வலிப்பு, தோஷம் இவை நீங்கும். பத்தியம் காக்கவும். ஏழாம் நாள் தலைமுழுக்குக் கொண்டு உணவில் உப்பு கூட்டலாம்.

### பித்த வெடிப்பிற்கு மருந்து

*பாரேநீ பித்தவெடிப்பு வந்த தானால்*
*பாங்கான மருதுடைய இலையை வாங்கி*
*சீரேநீ பசுவின்பாலி லூற வைத்து*
*சிறப்பாக மூன்றுநாள் குடிக்கச் சொல்லு*
*வீரேநீ பத்தியந்தான் பாலுஞ் சோறு*
*விதமாக ஏழாநாள் நீரை வாரு*
*பேரேநீ போகருட கடாட்சத் தாலே*
*பேதமில்லை புலிப்பாணி பாடி னேனே!* 30

பித்தவெடிப்பு ஏற்பட்டால் மருத இலையைப் பசுவின் பாலில் ஊற வைத்து மூன்று நாள் குடிக்கக் கொடுக்கலாம். பாலும் சோறும் சாப்பிடலாம். ஏழாம்நாள் நீர் வார்த்து முழுகலாம். இதனைப் போகரின் கடாட்சத்தால் அறிந்து புலிப்பாணியான நான் பாடினேன்.

### நீரில் இரத்தங் கண்டால் மருந்து

*பாடினேன் நீர்தனிலே ரத்தம் வீழ்ந்தால்*
*பாங்காகப் புழுங்கரிசி பலந்தா னொன்று*
*கூடினேன் விராலியிலை பலந்தா னொன்று*
*குணமாக வரிசியைத்தா னூற வைத்து*

*சாடினேன் இடித்தெடுத்து கொடுப்பா யப்பா*
*சார்வாக மூன்றுநா ளாறு வேளை*
*நாடினேன் இந்தவிதம் கொடுத்த போது*
*நடுநடுங்கி ஓடிவிடுந் திண்ணந் தானே!* 31

புழுங்கலரிசி 35கி, விராலியிலை 35கி, இவற்றை ஊறவைத்து இடித்து வடிகட்டி தினம் இரண்டுவேளை, மூன்று நாட்கள் குடித்து வர சிறுநீருடன் கழியும் இரத்தம் நீங்கி சுகம் பெறலாம்.

### வாய்விற்குக் கியாழம்

*பாரப்பா வாய்வென்ற குத்துக் கேதான்*
*பண்பான கொடிவேலிப் பட்டை யோடு*
*வீரப்பா சுக்குடனே பரங்கிப் பட்டை*
*விதமான பிரமனுட கிழங்குங் கூட*
*சேரப்பா வகைவகைக்கு விராகன் மூன்று*
*செயலான நாலுபடி சலத்தை விட்டு*
*கூரப்பா எட்டொன்றாய்க் கியாழம் வைத்து*
*கொடுத்தவுடன் வாய்வென்ற மேகம் போமே!* 32

கொடிவேலிப்பட்டை, சுக்கு, பரங்கிப்பட்டை, பிரம்மக் கிழங்கு இவை வகைக்கு 12 கி. வீதம் எடுத்து 5.2 லி தண்ணீரில் இட்டு கொதிக்க வைத்து எட்டிலொன்றாய்க் குறுக்கி குடிநீர் செய்து குடித்திட வாயுத்தொல்லை நீங்கும்.

*போமப்பா அந்திசந்தி மூன்று நேரம்*
*பொங்கமுடன் குடித்துவிட வாயு தீரும்*
*ஆமப்பா பத்தியந்தா னுப்பா காது*
*அடவாக வைந்தாநா ளெல்லாங் கூட்டு*
*வாமப்பா கொடிவேலி சுருக்குங் கூட்டு*
*வகையாகக் கியாழம்வைத்து உண்ட போது*
*தாமப்பா கொடிவேலி சுருக்கு மெத்த*
*தயவாக வாய்வெல்லா குணம தாமே!* 33

காலை, மாலை என மூன்று முறையும் குடித்துவர வேண்டும். இதனால் வாயு நீங்கும். உப்பில்லாப் பத்தியம் காக்கவும்.

இதனுடன் கொடிவேலி சுருக்குக் கொடுத்துக் கொள்ளவும். சுருக்குக் கொடுத்தபின் அதனைப் பருகினால் வாயு குணமாகும்.

### மேகம் இருபத்தொன்றுக்கு இளகம்

*தானாக இன்னமொன்று சொல்லக் கேளு*
*தயவான விளக்கெண்ணெய் படிதான் ரெண்டு*
*மானாக இளநீரும் பசுவின் பாலும்*
*மைந்தனே காடியுடன் பொன்னாங் கண்ணி*
*கோனாக ஆதண்டை யிலைவல் லாரை*
*குணமான வில்வயிலை அறுகன் வேரும்*
*வானாகக் கள்ளியையும் வாட்டி தண்ணீர்*
*வளமாக நீர்ப்பூண்டு சாணிப் பாலே!* 34

விளக்கெண்ணெய் 2.6 லி, இளநீர், பசும்பால், காடி, பொன்னாங்காணி, ஆதண்டைஇலை, வல்லாரை, வில்வஇலை, அறுகன்வேர், கள்ளிவாட்டிய தண்ணீர், நீர்ப்பூண்டு, சாணிப்பால் போன்றவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

*பாலப்பா வகைவகைக்குப் படிதா னொன்று*
*பாங்காகச் சரக்குவகை சொல்லக் கேளு*
*சாலவே வெந்தயம்சீ ரகத்தி னோடு*
*சார்வாகக் கொத்தமல்லி சிறுநா கப்பூ*
*கோலமுடன் சாதிக்காய் கிராம்பு ஏலங்*
*குணமான அதிமதுர கூகை நீறும்*
*சேலமாய் சீனமென்ற காரந் தானும்*
*செயலான வகைவகைக்கு வராக னொன்றே!* 35

இவை வகைக்கு 1.3 லி., இவற்றுடன் வெந்தயம், சீரகம், கொத்துமல்லி, சிறுநாகப்பூ, சாதிக்காய், கிராம்பு, ஏலம், அதிமதுரம், கூகைநீறு, சீனக்காரம் இவை.வகைக்கு 4 கி. எடுத்துக்கொள்ளவும்.

*ஒன்றான இவையெல்லாம் பொடித்துப் போட்டு*
*உத்தமனே சர்க்கரைதான் பலமே யொன்று*
*பன்றாகக் காய்ச்சியது மெழுக தானால்*
*பக்குவமாய் தான்வடித்து எடுத்துக் கொண்டு*

*நன்றாகத் துட்டெடைதான் கொள்ளும் போது*
*நலமாக மண்டலத்தில் சூடே தப்பா*
*ஒன்றாக மேனியது ஊறும் பாரு*
*உத்தமனே வாய்நாற்றம் போகும் பாரே!* 36

இவற்றை எல்லாம் பொடித்து, சர்க்கரை 35 கி பொடித்துப் போட்டு நன்றாகக் காய்ச்சவும். மெழுகு பதமாகும் போது எடுத்துக் கொள்ளவும். 5கி அளவு 40 நாட்கள் தினமும் உட்கொண்டு வர மேனி பளபளப்பாகும். வாய் நாற்றம் நீங்கும்.

## எலிக்கடி பதினெட்டுக்கும் மருந்து

*பாரேநீ இன்னமொன்று சொல்லக் கேளு*
*பதினெட்டு எலிக்கடிக்கும் மருந்தை யப்பா*
*வீரேநீ கரும்பூனை மலத்தை வாங்கி*
*விதமாகக் கழற்சிக்கா யளவு சேர்த்து*
*சேரேநீ மூன்றுநா ளாறு வேளை*
*செயலாகக் கொண்டிடவே தீரும் பாரே*
.........................................................
.........................................................! 37

*கரும்பூனை மலத்தை 5 கி. சேர்த்து, மூன்று நாள், ஆறுவேளை உட்கொண்டு வந்தால் பதினெட்டு வகை எலிக்கடிகளும் நீங்கும் என்பதாம்.

*பாரப்பா ஆறுநாள் பத்தியமே காரு*
*பண்பான உப்புமுதல் ஒன்று மாகா*
*விரப்பா ஏழாநாள் தலையை மூழ்கு*
*விதமாக உப்பிட்ட பருப்பு மாகும்*
*சேரப்பா எட்டாநாள் எல்லாங் கூட்டு*
*செயலாக நாட்சென்றால் சொல்லக் கேளு*
*கூரப்பா மூன்றுகெடு கொண்ட போது*
*குணமாக எலிக்கடிகள் தீருந் தானே!* 38

ஆறு நாட்கள் பத்தியம் காக்கவேண்டும். உப்பு, புளி, போகம் தவிர்க்க வேண்டும். ஏழாம்நாள் தலைமூழ்கவும், ஏழாம்

நாள் உப்பிட்டுக் கடைந்த பருப்பைச் சாப்பிடவும். எட்டாம் நாள் எல்லாம் சேர்த்துக் கொள்ளலாம். இவ்வாறு மூன்று முறை சாப்பிட்டு வந்தால் எலிக்கடிகள் நீங்கும்.

**நாய், நரிக் கடிகளுக்கு உள்ளுக்கும் மேலுக்கும் மருந்து**

*தானென்ற பேய்நரி கடித்த தானால்*
*தழைத்தமணத் தக்காளி இலைச்சா றப்பா*
*பானென்ற படிகால்தான் கொடுப்ப தப்பா*
*பாங்காக மூன்றுநா ளாறு வேளை*
*கோனென்ற பத்தியந்தா னுப்பா காது*
*குணமாகும் ஏழாநாள் நீரை வாரு*
*வேனென்ற நரிநாய் கடிதான் தீரும்*
*விதமாகு மிதின்தழையை மேலே பூசே! 39*

மணத்தக்காளிச்சாறு 330 கி. எடுத்து தினம் இரண்டு வேளை வீதம் மூன்று நாட்கள் சாப்பிடவும். ஆறு நாளும் உப்பு நீக்கி உட்கொள்ளவும். ஏழாம்நாள் தலைமூழ்கவும். மீதமுள்ள இலை களை உடம்பில் பூசவும். இவ்வாறு சாப்பிட நாய், நரிக் கடிகள் குணமாகும்.

**பூனைக்கடிக்கு மருத்துவம்**

*பூசியே பூனையுட கடிதான் தீர*
*புனிதமுள்ள பூனைதொழும் பட்டை வாங்கி*
*ஆசியே பசுவின்பால் தனில ரைத்து*
*அப்பனே பத்தியமாய்க் குடிக்கச் சொல்லு*
*கூசியே முன்போல பத்தியமே காரு*
*குணமுள்ள நீலிவேர் தனைஅ ரைத்து*
*வாசியே ஈராறு நாளும் பூச*
*வகையாகப் பூனைக்கடி தீருந் தானே! 40*

மேலும் பூனைக்கடி தீர பூனை வணங்கிப் பட்டையைப் பசும்பாலில் அரைத்துக் குடித்து வரவேண்டும். பத்தியம் காக்கவும். அவுரிவேரைப் பசும்பாலில் அரைத்து பூனைக் கடித்த இடத்தில் பன்னிரெண்டு நாட்கள் பூசவும், பூனைக்கடி குணமாகும்.

## வண்டு கடிக்கு மருந்து

*திருமப்பா வண்டுகடி வந்த பேர்க்கு*
*திறமாக மருந்தொன்று சொல்லக் கேளு*
*மாருமப்பா வெள்ளாட்டு கறுத்த பாலு*
*மைந்தனே தினையரிசி படிதான் காலு*
*விருமப்பா மூலியொன்று அறியச் சொல்வேன்*
*விதமான ஆடுதொடா மூலிச் சாறு*
*கூருடனே வேகவைத்து அந்தி சந்தி*
*குணமாகக் கொண்டிடவே தீரும் பாரே!* 41

330 கி தினை அரிசியை, வெள்ளாட்டுப்பால், ஆடுதொடா மூலிச்சாறும் சேர்த்து அதில் வேக வைத்து காலை, மாலை உட்கொண்டு வர வண்டு கடி நீங்கும்.

*பாரேநீ சாறதுதான் படிதான் விதம்*
*பண்பான பத்தியந்தா னுப்பா காது*
*கூரேநீ வெள்ளாட்டுப் பால்சோ றுண்ணு*
*குணமாக ஏழாம்நாள் நீரை வாரு*
*சேரேநீ வசம்புடனே நீலி வேரும்*
*சிறப்பாக தானுரைத்துப் பூசு பூசு*
*தீரேநீ வண்டுகடி எல்லாம் போகும்*
*திறமான போகருட கடாட்சந் தானே!* 42

உப்பு நீக்கிச் சாப்பிட்டுப் பத்தியம் காக்கவும். வெள்ளாட்டின் பாலில் சோறு உண்ணலாம். ஆறுநாள் இவ்வாறு சாப்பிட்டு ஏழாம்நாள் தலை மூழ்கவும். வசம்பும், நீலிவேரும் சேர்த்து உரைத்துப் பூசவும். போகரின் கடாட்சத்தால் வண்டுகடி எல்லாம் தீரும்.

*தானேதா னிதுபோல விஷமு முண்டு*
*தயவான மேகவகை இதுபோ லுண்டு*
*கூனேதான் செய்தொழிலு மிதுபோ லுண்டு*
*குடிலமாய் தாமரையு மிதுபோ லுண்டு*
*சோனேதா னிதுபோல தீரா விட்டால்*
*துணிவாக ரசபதங்கம் கொள்ளச் சொல்லு*

*ஊனேதான் கண்டுகண்டு மருந்து செய்நீ*
*உத்தமனே இல்லாவிட்டால் ஏகு பாரே!* 43

இதுபோன்ற பலவகை விஷக்கடிகள், மேகவகைகள், மருந்தீடு, படர்தாமரை இவை தீராவிட்டால் இரசபதங்கம் வழங்கிச் சாப்பிடச் செய்யலாம். நோயை அறிந்து நோய்க்குத் தன்மை கண்டு மருந்து வழங்கலாம்.

**பூரான் கடிக்கு மருத்துவம்**

*பாரப்பா பூரான்தான் கடித்த பேர்க்கு*
*பண்பான எருக்கம்பூ நரம்பைப் போக்கி*
*சீரப்பா பூவேழு கொடுத்துப் பாரு*
*சிறப்பாக ஞானிமலம் புகையைக் காட்டு*
*கூரப்பா நாட்சென்றால் மண்ட லங்கொள்*
*குணமாகப் பத்தியந்தா னில்லை பாரு*
*வீரப்பா பூரான்தன் தடிப்பு மாறும்*
*விதமாக அதன்விடமும் தீருந் தானே!* 44

எருக்கம்பூவிலுள்ள நடுநரம்பை நீக்கி ஏழு எருக்கம் பூக்களைக் கொடுக்கவும். ஞானிமலம் எனும் நாய்மலத்தின் புகையைப் பூரான் கடித்தவிடத்தில் காட்டவும். அதிகமானால் நாற்பது நாட்கள் மருந்தைச் சாப்பிடலாம். அவ்வாறு சாப்பிட்டால் பூரான் கடி தடிப்பு மாறும். அதன் விடமும் தீரும்.

**செய்யான், பெருச்சாளி கடிகளுக்கு மருத்துவம்**

*தானென்ற செய்யான்தான் கடித்த பேர்க்கு*
*தயவாகக் கொல்லனுட கோவை மூலம்*
*பானென்ற பாக்களவு கொள்ளச் சொல்லு*
*பண்பான மயிற்பீலி புகையைப் போடு*
*தோனென்ற செய்யான்தன் விஷமும் போகும்*
*குணமான பெருச்சாளிக் கடிதான் தீர்க்க*
*வோனென்ற அருகன்வேர் வெள்ளி தன்னில்*
*விதமாகக் குடித்தவுடன் தீர்ந்து போமே!* 45

செய்யான் கடித்தோர்க்கு, கொல்லங்கோவை வேர் எடுத்து 2.2 கி. உட்கொள்ளச் செய்யலாம். மயில் பீலிகையின் புகையைக் காட்டலாம். இவ்வாறு செய்ய செய்யான்கடி விஷம் நீங்கும். அறுகன் வேர்த் தைலத்தை வெள்ளிக் குவளையில் குடித்தவுடன் பெருச்சாளிக்கடி நீங்கும்.

## தேள் விஷத்திற்கு மருந்து

*போமப்பா தேள்காலி கடித்த பேர்க்கு*
*பொங்கமுடன் பெரியநங்கை வேரைத் தானும்*
*வாமப்பா நீரிலே உரைத்துப் பூசு*
*வளமான மட்டிப்பால் புகையைப் போடு*
*ஆமப்பா கடுகடுப்பு அடங்கிப் போகும்*
*அப்பனே தேள்காலி விசமும் தீரும்*
*நாமப்பா போகருட கடாட்சத் தாலே*
*நலமாகப் புலிப்பாணி பாடி னேனே!* 46

தேள்கடித்தோர் பெரியா நங்கை வேரைத் தண்ணீரில் உரைத்துப் பூசவும். சாம்பிராணி மட்டிப்பால் புகையைப் போட்டுப் பிடிக்கவும். தேள்கடி, கடுகடுப்பு நீங்கும். தேள்கடி விஷமும் நீங்கிக் குணமாகும்.

## சகல விஷத்திற்கும் மருந்து

*பாடியதோர் விஷங்களெல்லாந் தீர வேதான்*
*பண்பாக எட்டிப்பழந் தன்னை வாங்கி*
*கூடியதோர் சட்டியிலே வேண்டிய மட்டும்*
*குணமாகத் தானெடுத்து வேப்பெண்ணெய் விட்டு*
*நாடியே அடுப்பேற்றி வேக வைத்து*
*நலமாக உருட்டியதைச் செப்பில் மூடி*
*தூடியே விஷந்திண்டி வந்த பேர்க்கு*
*தூதுவிளங் காயளவு கொடுத்தி டாயே!* 47

பலவகை விஷங்கள் தீருவதற்கு எட்டிப் பழத்தை வேப் பெண்ணெயில் வேக வைத்து செப்பில் அடைத்துப் பாதுகாத்துக்

கொள்ள வேண்டும். விஷம் தீண்டினோர்க்குத் தூதுவிளங்காயளவு இதனை வழங்க வேண்டும்.

### விஷத்திற்கு நசியம், கலிக்கம்

*கொடுத்திடவே விஷத்துக்கு நசிய மொன்று*
*குணமாக நீலமென்ற துரிசை வாங்கி*
*அடுத்திடவே விராகனரைத் துணியில் வைத்து*
*அடவாகச் சிறுநீரில் நசியம் பண்ணு*
*எடுத்திடவே விஷமெல்லா மிறங்கிப் போகுங்*
*இதமான கலிக்கமொன்று இயம்பக் கேளு*
*தொடுத்திடவே சிறுபூளை கசக்கிக் கண்ணில்*
*தேராமல் சிக்கென்று கெட்டிப் போடே!* 48

நீலமென்று அழைக்கப்படும் துரிசை 2 கி. எடுத்து அரைத்துத் துணியில் முடிந்து சிறுநீரில் நசியம் பண்ணவும். தீண்டிய விடம் இறங்கிப் போகும். மேலும் சிறுபீளையைக் கசக்கிக் கண்ணில் கலிக்கமிட்டால் விஷம் கட்டியாகி ஓரிடத்தில் நின்றுவிடும்.

### சிறுபாம்பு கடிக்கு மருந்து

*போடப்பா சிறுபாம்பு கடித்த பேருக்கு*
*பொங்கமுடன் சிறுகுறிஞ்சான் வேரை வாங்கி*
*நாடப்பா வெந்நீரால் அரைத்துக் கொண்டு*
*நலமாக அந்திசந்தி மூன்று நாளுண்ண*
*வாடப்பா பத்தியந்தா னுப்பா காது*
*வளமான ஏழாம்நாள் சலத்தை வாரு*
*சாடப்பா சிறுபாம்பு தடிப்பு மாறும்*
*சார்பாகப் போகருட கடாட்சந் தானே!* 49

சிறுகுறிஞ்சான் வேரை வெந்நீரில் அரைத்து காலை, மாலை இருவேளை மூன்று நாள் உண்ண வேண்டும். பத்தியமாக உப்பு நீக்கவும். சிறுபாம்பு கடிவிஷம் குணமாகும். ஏழாம்நாள் தலைமூழ்கினால் கடியிட தடிப்பு மாறும்.

## குட்டத்திற்குக் குழித்தைலம்

*தானென்ற குட்டநோய் வந்த பேர்க்கு*
*தயவாக மருந்தொன்று சொல்லக் கேளு*
*ஊனென்ற செவ்வலரி வேரை யப்பா*
*உலரவிட்டு குழித்தயில மாக வாங்கி*
*பானென்ற குப்பிதனி லடைத்துக் கொண்டு*
*பண்பாகச் சிறுகுச்சி தயிலத் திட்டு*
*ஏனென்ற ஒருதுளி தண்ணீரில் குத்தி*
*இதமாகத் தான்கலக்கி கொடுத்தி டாயே!* 50

இந்தப் பாடலில் குட்டரோகத்திற்கு மருந்து சொல்லப் படுகிறது. செவ்வலரி வேரை உலர்த்தி இடித்துக் குழித்தைலம் இறக்கிக் கொள்ளவும். இதனைப் பத்திரமாகக் குப்பியில் அடைத்துக் கொள்ளவும். சிறிய குச்சியைத் தைலத்திலிட்டு ஒரு சொட்டு தைலத்தைத் தண்ணீரில் இட்டு கொடுத்திடவும்.

*கொடுத்திடப்பா நாள்மூன்று காலை வேளை*
*குருதியப்பா வடியுமடா ரணங்கள் தோறும்*
*அடுத்திடப்பா பத்தியந்தா னுப்பா காது*
*அடைவாக ஏழாம்நாள் நீரை வாரு*
*விடுத்திடப்பா உப்பிட்ட பருப்புங் கூட்டி*
*விதமாக மற்றநாள் புளியைச் சேரு*
*எடுத்திடப்பா குட்டநோய் தீர்ந்து போகும்*
*இதமான போகருட கடாட்சந் தானே!* 51

இதனைக் காலையில் மட்டும் மூன்று நாட்கள் கொடுத்துவர இரணங்களில் இரத்தம் வழிவது நிற்கும். மருந்துண்ணும் காலத்தில் உப்பைத் தவிர்க்கவும். ஏழாம்நாள் தலை மூழ்கவும். எட்டாம் நாள் உப்பிட்ட பருப்பும், ஒன்பதாம் நாள் புளியும் சேர்க்கலாம். இவ்வாறு செய்வதால் போகர் கடாட்சத்தாலே குட்டம் நீங்கும்.

## மருந்தீட்டிற்கு எண்ணெய்

*தானாக இன்னமொன்று சொல்லக் கேளு*
*தயவாக மருந்திடு கொண்ட பேர்க்கு*
*கோனாக எண்ணெயிட்டு முழுகச் சொல்லி*
*குணமாக ரசம்விட்டு அன்ன மீய்ந்து*
*வேனாகத் தேங்காயின் பாலை வாங்கி*
*விதமாகக் கரும்பாலை சர்க்கரை சேர்த்து*
*வானாகத் தேங்காயின் பாலை யுண்டு*
*வகையாகக் கம்பளமேல் படுக்கச் சொல்லே!* 52

மருந்தீடு உள்ளவர்களை மேல் சொன்ன எண்ணெய் விட்டு தலை மூழ்கச் செய்து இரசம் சாதம் உண்ணச் செய்யலாம். தேங்காய் தனிப்பால் எடுத்து சர்க்கரை சேர்த்துப் பருகச் செய்து கம்பளியில் படுக்கச் செய்யலாம்.

*சொல்லப்பா முருங்கையென்ற இலையை வாங்கி*
*சேரவே வத்தியதைச் சாறு பிழிந்து*
*அல்லப்பா சாறுபடி காலே யாகும்*
*அடவாக ஆவின்பால் நேரே சேர்த்து*
*அல்லப்பா காலமே கொடுத்த போது*
*அடவாகப் பேதியிலே மருந்து விழும்*
*நல்லப்பா விழுந்தவுடன் ஸ்நானம் பண்ணு*
*நலமாக வேணதெல்லாம் கூட்டிக் கொள்ளே!* 53

முருங்கை இலையை வதக்கிச் சாறுபிழிந்து, 330 மிலி. எடுத்து அதே அளவு பசும்பால் சேர்த்து காலையில் வழங்கி வர பேதியாகும். அந்த பேதியில் வைத்த மருந்து வீழ்ந்துவிடும். மருந்து வீழ்ந்ததும் தலைமூழ்கிப் பின் வேண்டியவற்றை எல்லாம் சாப்பாட்டில் சேர்த்துக் கொள்ளலாம்.

## நஞ்சுண்டவர்க்கு மருந்து

*கொள்ளவே நஞ்சுண்ட பேர்கட் கெல்லாம்*
*குணமாக நீலிவேர் பட்டை தன்னை*
*அள்ளவே காடியிலே அரைத்து ஊட்ட*
*அடவாக நஞ்சுக்கு மயக்கம் வாங்கும்*

*..................................................*
*..................................................*
*..................................................*
*..................................................! 54*

அவுரி வேர்ப்பட்டையைக் காடியிலே அரைத்து உள்ளுக்குக் கொடுத்தால் நஞ்சுண்டோர்க்கு உண்டான மயக்கம் நீங்கி நஞ்சும் நீங்கும்.

## பிரமைக்கு அண்ட பற்பம்

*தானென்ற பிரமையது கொண்ட பேர்க்கு*
*தயவாக மருந்தொன்று சொல்லக் கேளு*
*கோனென்ற போகருட கடாட்சத் தாலே*
*குணமாகப் புலிப்பாணி விளக்கஞ் செய்தேன்*
*ஊனென்ற கபாலத்தை எடுத்து வந்து*
*உத்தமனே எலுமிச்சம் பழச்சாற் றாலே*
*நானென்ற சீனமதைப் பொடித்துப் போட்டு*
*நலமான கல்வத்தி லரைத்தி டாயே! 55*

பிரமைகொண்டோர்க்கு இப்பாடலில் மருந்து சொல்லப் படுகிறது. போகரின் கடாட்சத்தால் புலிப்பாணியாம் நான் விள்க்கம் சொல்வேன். கபாலத்தையும் படிகாரப் பொடியையும் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பழச்சாற்றால் அரைத்துக் கொள்ளவும்.

*அரைத்தெடுத்து வில்லைதட்டி உலரப் போட்டு*
*அடவாகப் புடம்போட்டு எடுத்துக் கொள்ளு*
*விரைத்தவுடன் பொடியாக்கிப் பதனம் பண்ணி*
*விதமாக விராகனிடை கொடுத்துக் கேளு*
*உரைத்தவுடன் கத்தபத்தின் பாலை யப்பா*
*உறவாகத் துட்டெடைதான் ரண்டே யாகும்*
*குரைத்தவுட னிஞ்சிசா றிதனிற் பாதி*
*குணமாக அதுநேர் சர்க்கரையுங் கூட்டே! 56*

அரைத்த விழுதை வில்லைகளாகத் தட்டி உலரவைத்துப் புடம்போட்டு எடுத்துக்கொள்ளவும். பின்னர் அதனைப் பொடியாக்கிப்

பதனம் பண்ணவும். 4கி அளவு பொடியைக் கழுதைப் பாலில் சேர்த்துக் கொடுக்கவும். இதில் 1கி அளவு எடுத்து இஞ்சிச் சாற்றில் குழப்பிக் கொடுக்கவும். அதே அளவு சர்க்கரை சேர்த்தும் வழங்கலாம்.

*கூட்டப்பா ஈராறு நாளே கொள்ள*
*குணமாக அந்திசந்தி இந்த பாகம்*
*ஆட்டப்பா நசியமது தும்பைச் சாறு*
*அடவாகத் தான்விட்டு சொல்லக் கேளு*
*சூட்டப்பா பேய்ப்பீர்க்கு பேய்மி ரட்டி*
*சுகமான பேய்ப்புடலும் பேய்க்கும் மட்டி*
*நாட்டப்பா பேயத்தி பேயாம் தும்பை*
*நலமான எலுமிச்சம் பழமு மாமே!* 57

இம்மருந்தைப் பன்னிரெண்டு நாட்கள், காலை, மாலை, இரண்டு வேளை சாப்பிடவும். தும்பைச் சாற்றைப் பிழிந்து மூக்கில் நசியமிட்டுக் கொள்ளவும். பேய்ப்பீர்க்கு, பேய்மிரட்டி, பேய்ப்புடல், பேய்க்கும்மட்டி, பேயத்தி, பேய்த்தும்பை இவற்றுடன் எலுமிச்சம்பழச்சாறு சேர்த்துக் கொள்ளவும்.

*ஆமேநீ இச்சாற்றைத் தேய்த்து தேய்த்து*
*அடவாக நூறுகுட சலத்தை வாரு*
*தாமேநீ ஈராறு நாள்தான் வாரு*
*தயவாகப் பத்தியந்தான் சொல்லக் கேளு*
*வாமேநீ பச்சரிசி பருப்பி னோடு*
*வளமாகத் தான்கொடும்பா யுப்பா காது*
*ஆமேநீ தேவரோடு பிரமை பித்தம்*
*அடவான வஞ்சனையுந் தீருந் தானே!* 58

எலுமிச்சம்பழச் சாற்றைத் தேய்த்துப் பின் பலமுறையும் தேய்த்து நூறு குடம் ஊற்றவும். இவ்வாறு பன்னிரெண்டு நாட்கள் ஊற்றிவரவும். பன்னிரெண்டு நாட்கள் தலை மூழ்கியபின் பருப்பு பச்சரிசி சேர்த்துச் சாப்பிடவும். உப்பு நீக்கி விடவும். இதனால் பிரமை, பித்தம், வஞ்சனைகள் இவை தீரும் என்பது.

## மூலநோய்க்குச் சூரணம்

*போமேநீ மூலமென்ற ரோகந் தீர*
*பூட்டுகிறேன் மருந்தொன்று சொல்லக் கேளு*
*ஆமேநீ தூர்துவளை மூலத் தோடு*
*அடவான மருட்கிழங்கு கருணை மூலம்*
*தாமேநீ பிரண்டைவேர் நல்ல ஆரை*
*தயவான காட்டுடைய கருணை மூலம்*
*வாமேநீ மிளகரணை மூலந் தானும்*
*வளமான அறுகினுட கிழங்கு தானே!* 59

மூலநோய் தீர இங்கு மருந்து கூறப்படுகிறது. தூதுவேளை வேர், மருட்கிழங்கு, கருணைக் கிழங்கு, பிரண்டைவேர், ஆரைவேர், காட்டுக் கருணைக் கிழங்கு, மிளகரணைவேர், அறுகங் கிழங்கு ஆகியவற்றை எடுத்துக்கொள்ளவும்.

*தானென்ற நீர்ப்பூண்டு கிழங்கு மூலி*
*தயவாக உரலிட்டு தூளாய்ச் செய்து*
*கோனென்ற பொடியெல்லாஞ் சமனாய்ச் சேர்த்து*
*கொடுப்பாயே விரற்கடைதான் தேனில் கொள்ள*
*நானென்ற நாற்பதுநாள் கொள்ளும் போது*
*நடுநடுங்கி மூலமெல்லாம் ஓடும் பாரு*
*வானென்ற போகருட கடாட்சத் தாலே*
*வளமான புலிப்பாணி பாடி னேனே!* 60

நீர்ப்பூண்டு கிழங்கு, அதன் இலை ஆகிய எல்லாவற்றையும் உரலிலிட்டுத் தூளாய் இடித்து சிட்டிகை அளவெடுத்துத் தேனில் 40 நாட்கள் உட்கொண்டால் மூல நோயானது இருந்த இடம் தெரியாமல் ஓடிப்போகும்.

## கிரந்தி அரையாப்பிற்கு எண்ணெய்

*விளம்புகிறேன் எண்ணெயொன்று சொல்லக் கேளு*
*விதமான சங்கோடு சங்கங் குப்பி*
*அளம்புகிறேன் கருநொச்சி உடுது ரத்தி**
*உத்தமனே வெள்ளறுகு சின்னி யோடு*

*தளம்புகிறேன் கிரந்திநா யகமுங் கூட்டி*
*தயவான பூவரசம் பட்டை யோடு*
*குளம்புகிறேன் பாச்சானை வாட்டி தண்ணீர்*
*குணமான நீர்ப்பூண்டு சாறுந்தான் வாரே!* 61

சங்கு, சங்கங்குப்பி, கருநொச்சி, வெள்ளறுகு, சின்னி, கிரந்திநாயகம், பூவரசம்பட்டை இவற்றை வகைக்கு 35கி சேர்த்து கள்ளியை வாட்டிய சாறு, நீர்ப்பூண்டு சாறு வார்த்துக் கொள்ளவும்.

*வாரப்பா வகைவகைக்கு பலந்தான் வீதம்*
*வகையாக அளந்துவிட்டு எண்ணெய் நாழி*
*சேரப்பா ஒருநாள்தான் ரவியில் வைத்து*
*சிறப்பாக மற்றாநாள் அனலை மூட்டு*
*மாரப்பா எட்டொன்றாய்க் காயும் போது*
*மைந்தனே சரக்குவகை சொல்லக் கேளு*
*கூரப்பா பரங்கியுட பட்டை தானும்*
*குணமான கருஞ்சீரகம் கார்போக மாமே!* 62

சாறுகளை வகைக்கு 35கி, எண்ணெய் 1.3லி. இவற்றைச் சேர்த்துக் கலந்து வெயிலில் வைத்து ஒருநாள் விட்டு இரண்டாம் நாள் எடுத்து அனல் மூட்டவும். இது எட்டில் ஒன்றாகக் குறுகும் போது பரங்கிப்பட்டை, கருஞ்சீரகம், கார்போகரிசி, இவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.

*ஆமேநீ கஸ்தூரி மஞ்ச ளோடு*
*அடவான வசம்புடனே வெள்ளைப் பூண்டு*
*தாமேநீ வகைவகைக்கு வராக னைந்து*
*தயவான எண்ணெயிலே பொடித்துப் போடு*
*வாமேநீ மெழுகுபதந் தனில்வ டித்து*
*வகையாகப் படியரைகால் கொள்ளச் சொல்லு*
*போமேநீ மூன்றுநாள் கொண்ட பின்பு*
*பொலிவான பத்தியந்தா னாறு நாளே!* 63

கஸ்தூரி மஞ்சள், வசம்பு, வெள்ளைப்பூண்டு இவை வகைக்கு 20கி எடுத்துக்கொண்டு பொடித்து மேற்சொன்ன எண்ணெயில் போடவும். அடுப்பேற்றி மெழுகுபதமாகும்போது வடித்து 165மிலி

அளவு மூன்று நாட்கள் உட்கொள்ளவும். பின்னர் ஆறு நாட்கள் பத்தியம் காக்க.

*நாளான ஏழாம்நாள் தலையை மூழ்கு*
*நலமான உப்பிட்ட பருப்பைச் சேரு*
*கேளான நாற்பதுநாள் கடுகொள் ளாதே*
*குணமான வாழையிலை வாழைக் காயும்*
*கோளான கரப்பானென்ற தெல்லாந் தள்ளு*
*தெளிவான பெண்மயக்கம் சற்று மாகா*
*பாளான கிரந்தி அரையாப்பு சூலை*
*பண்பான மேகமெல்லாந் தீருந் தானே!* 64

ஏழாம்நாள் தலைமூழ்க வேண்டும். மேலும் பருப்புடன் உப்புச் சேர்த்துச் சாப்பிடலாம். 40 நாட்கள் கசப்பை நீக்கவும். வாழை இலை, வாழைக்காய், கரப்பான் பண்டங்கள் பெண்போகம் இவற்றை எல்லாம் நீக்கவும். கிரந்தி, அரையாப்பு, சூலை, மேகம் தீரும்.

**இறையியல் கருத்துகள்**

*தானான முன்யுகத்தில் பிரமா வுக்குத்*
*தாயான பார்வதியாள் தந்த சாபம்*
*கோனான தண்டாயுதத்தைப் பூசை செய்து*
*கொடிதான சாபமது நிவர்த்தி யாச்சு*
*தேனான திரேதாவின் யுகத்தி லப்பா*
*தேவேந் திரனுக்கு துருவாசர் சாபம்*
*மானான தேவர்கோன் பூசை செய்து*
*மைந்தனே முனிசாபம் தீர்ந்து போச்சே!* 65

பிரமனுக்கு, முன்பிறவியில் பார்வதி தந்த சாபம் தண்டாயுத பாணியைப் பூசை செய்தபின் நிவர்த்தியாயிற்று. திரேதாயுகத்திலே தேவேந்திரனுக்குத் துர்வாசர் இட்ட சாபம் தேவர்களைப் பூசை செய்ததால் தீர்ந்தது.

*போனபின்பு சொக்கலிங்கம் தன்னில் சென்று*
*பொன்னுலகில் தேவேந்திரன் பட்ட மாச்சு*

*ஆனபின்பு துவரபுரியில் போக நாதர்*
*அடவான கற்சிலையில் அம்ம னொன்று*
*கோனபின்பு கொங்கணரும் கருவூ ராரும்*
*கூட்டிவந்து முன்விட் டரையன் முன்னே*
*கோனபின்பு கற்சிலையைச் சேர்ந்த போது*
*சிந்தைதனில் சிலையென்று அறிந்திட் டாரே!* 66

பின்னர் சொர்க்கபோகம் சென்று தேவேந்திரன் எனும் பட்டத்தை வென்றார். துவரபுரியில் போகர், கற்சிலையானார். பின்னர் கொங்கணரும், கருவூராரும் அருகில் சென்று சிலையைத் தொட்ட பின்னர் தான் அது சிலையென்று அறிந்து கொண்டனர்.

*அறிந்தபின்பு அச்சிலையைப் பார்த்து அம்மா*
*அபசார மடியோர்க்கு நிவர்த்தி யென்ன*
*வறிந்தபின்பு சிவகிரியில் தண்ட பாணி*
*மன்னவரைப் பூசிக்க நிவர்த்தி யாகும்*
*புரிந்தபின்பு தேவியென்ன சிலைதான் சொல்ல*
*போகருமே துவரபுரியில் பூசை செய்தார்*
*செரிந்தபின்பு அபசாரம் நிவர்த்தி யாச்சு*
*சார்வான கலியுகத்தில் சொல்லக் கேளே!* 67

அந்தச் சிலைக்கு உயிர்தருவதற்கு நிவர்த்தி என்னவென்றால் தண்டாயுதபாணியைப் பூசிப்பதாகும். போகர் உயிர்த்தெழுந்து இதனை அறிந்த பின்னர் துவாரபுரியில் சென்று பூசை செய்தார். அறிந்த பின்னர் அபசாரம் நிவர்த்தியானது. கலியுகத்தில் சொல்வதை உணர்ந்து கொள்ளவும்.

*கேளேநீ கலியுகத்தி லிருநூற் றைந்தில்*
*கேசரிபோல் புலிப்பாணி பேரும் பெற்றேன்*
*சூளேநீ சலந்திரட்டி கரத்தி லேந்தி*
*சுகமாக வேங்கையின் மேல்ஏறிச் சென்று*
*நாளேநீ சிவகிரியில் தண்ட பாணி*
*நாதருக்கு பூசித்து அருளைப் பெற்று*
*ஆளேநீ போகருட குகைக்கு மேலையா*
*அஷ்ட்டசத்தி பதிதனிலே வாழ்ந்தேன் பாரே!* 68

இந்தக் கலியுகத்திலே கேசரிபோலப் புலிப்பாணியாம் நானும் பேர் பெற்றேன். சலத்தைத்திரட்டி கைகளில் ஏந்தி வேங்கைப் புலியின் மீதேறிச் சென்று சிவகிரியில் தண்டாயுதபாணியைப் பூசித்து அருள் பெற்று போகரின் குகைக்கு மேலே எட்டுசக்தி களையும் கொண்ட பதியில் வாழ்ந்தேன் என்பதாம்.

*பாரேநீ யுகந்தோறும் சொல்லக் கேளு*
*பண்பான மேருவுக்கு வடபா கத்தில்*
*தீரேநீ மனிதரப்பா தங்கி வர்ணம்*
*திகழ்மதியா முயரமப்பா சொல்லக் கேளு*
*வாரேநீ நாலாயிர முழமே யாகும்*
*வளமான ஆலங் கனியும் நீரோடே*
*சீரேநீ அருந்துறது அதுதா னப்பா*
*சிறப்பான சதாசிவமே தெய்வந் தானே!* 69

இனி யுகந்தோறும் நடக்கின்ற நிகழ்ச்சிகளைச் சொல்கிறேன். மேரு (இமய) மலைக்கு வடக்குப் பாகத்தில் தங்கி உயரமான இடத்தில் சிவன் இருப்பதைச் சொல்ல வேண்டும். இதன் உயரம் 4000 முழமாகும். ஆலங்கனியை நீருடன் சேர்த்து அருந்தி தெய்வத்தைத் துதிக்கலாம் என்பது பனிலிங்க கைலாச நாதரைச் சொல்கிறார் போலும்.

*தானாகும் வயதுதான் நாலு லட்சம்*
*தயவாகச் சத்தியத்தைக் கைவி டாதார்*
*கோனான பொய்யொன்றுஞ் சொல்லி டாதாங்*
*குவலயங்கள் கைலையல்லால் வேறொன் றில்லை*
*சேனான மேருவுக்கு வடபா கத்தில்*
*செயலான மனிதருட செய்கை யப்பா*
*தேனான போகருட கடாட்சத் தாலே*
*தெளிவாக புலிப்பாணி விளம்பி னேனே!* 70

இதன் வயதோ நான்கு இலட்சம், சத்தியத்தைக் கைவிடாமல், பொய் பேசாமல், குவலயமாம் கைலாசம் செல்வதன்றி வேறொன்று மில்லை. மேருவுக்கு வடக்கு பாகத்தில் நடக்கும் மனிதருடைய செயல்களைப் பற்றி போகரின் கடாட்சத்தாலே புலிப்பாணியாம் நான் சொன்னேன்.

*விளம்புகிறேன் மேருவுக்கு கிழக்கே யப்பா*
*விதமான மனிதர்கள்தான் நீல வர்ணம்*
*தளம்புகிறேன் உயரமது நானூ றாகும்*
*தயவான நவக்கனியும் நீரி னோடே*
*கிளம்புகிறேன் அருந்துறது இதுதா னப்பா*
*கிருபையுள்ள விஷ்ணுவே தெய்வ மாகும்*
*நளம்புகிறேன் வயதுதானி ரண்டு லட்சம்*
*நலமில்லா அசத்தியங்க ளில்லை தானே!* 71

மேரு மலைக்குக் கிழக்குப் பக்கத்தில் நீலவர்ணத்தில் 400 அடி உயரத்தில் ஒரு விதமான மனிதர்கள் மலையை ஒட்டி வாழ்ந்தார்கள். நவலோகங்கலந்த நீரை அருந்தினார்கள். கிருபை கொண்ட விஷ்ணுதான் இவர்களுக்குத் தெய்வமாகும். அவரை வணங்கி பூசித்தால் வாழும் வயது நீளும் என்பதாம்.

*இல்லான மேருவுக்கு மேற்கே யப்பா*
*இருப்பார்கள் மனிதரப்பா ரத்த வர்ணம்*
*வல்லான உயரமது நாற்ப தாகும்*
*வகையான மாங்கனியும் நீரி னோடே*
*எல்லாரு மருந்துறது இதுதான் பாரு*
*இதமான பராசக்தி தெய்வ மாகும்*
*சல்லான வயதுதான் லட்ச மாகும்*
*சார்வான சத்தியமும் பொய்யில் லாரே!* 72

மேரு மலைக்கு மேற்கில் உள்ள மனிதர்கள் சிவப்பு நிறத்தில் காணப்பட்டார்கள். அவர்கள் உயரம் 40 அடியாகும். ஒருவகையான மருந்து என மாங்கனிச் சாற்றை நீரில் கலந்து எல்லோரும் அருந்த வேண்டும். இதற்கு இட்ட தெய்வம் பராசக்தியாகும். இதனை உண்போர் வாழும் வயது நீளும் என்பதில் பொய்யில்லை.

*பொய்யில்லை மேருவுக்குத் தெற்கே ஐயா*
*பொங்கமுடன் மனிதருட நிறத்தைக் கேளு*
*மையில்லா நிறமதுதான் அந்த வர்ணம்*
*மைந்தனே உயரமது முழந்தா னாலு*
*செய்யிலா அறுசுவையும் அநேக வர்க்கம்*
*செயலான அன்னமோடு சருகை நீரும்*

*எய்யான பாலோடு கிழங்கு காய்கள்*
*இதமான அமுர்தமது கொள்வா ருண்டே!* 73

மேரு மலைக்குத் தெற்கு திசையில் உள்ள மக்கள் கருமை நிறமாகக் காணப்படுவர். உயரம் 4 முழமாகக் காணப்படுவர். அறுசுவை உணவை அனேகர்க்கு வழங்குவர். பால், கிழங்கு, காய்கள் இவற்றுடன் சேர்த்து அமிர்தம் கொள்வர்.

*உண்டான அநேகவித தெய்வ முண்டு*
*உத்தமனே சாஸ்திரங்கள் நேச முண்டு*
*பண்பான பொய்கொலையு களவு முண்டு*
*பண்பில்லா விசுவாசம் பாவ முண்டு*
*செண்டான முறமைகெட்டு மையல் கொண்டு*
*செய்யான பாக்கியமும் மறுமை யுண்டு*
*கொண்டான வயதுதான் நூறென் பார்கள்*
*கொற்றவனே நிச்சயந்தா னில்லை தானே!* 74

தெய்வங்கள் அனேகமுண்டு, சாஸ்திரங்கள், பொய், கொலை, களவு, விசுவாசம், இவையெல்லாம் உண்டு. பண்புகெட்டு மையல் கொண்டு, பாக்யம் பெற்றாலும் மறுமை எனும் பிறவி உண்டு. வயதோ நூறென்பார்கள். ஆனால் அது நிச்சயமில்லை.

*தானென்ற கோயில்குளம் ஆறு முண்டு*
*தயவான புண்ணியமும் பாவ முண்டு*
*மானென்ற சித்தரென்றும் முனிவ ரென்றும்*
*மகிமையாம் போதனர்கள் பெரியோ ரென்றும்*
*கோனென்ற அரசரென்று குருக்க ளென்றும்*
*கொடிதான பிரமலபி கடந்தோ ரென்றும்*
*வானென்ற கிரகங்கள் நோய்க ளென்றும்*
*வகைவகையாய் பலசாதி அநேகந் தானே!* 75

கோயில்குளங்களும், ஆறுகளும் உண்டு, புண்ணியமும், பாவமுமுண்டு, சித்தரென்றும் முனிவரென்றும், மகிமையுள்ள போதனை கொண்டோர், பெரியோர்கள், அரசர், குருக்கள், எல்லாம் கடந்தோர், கிரகங்கள், நோய்கள் என்றும் வகைவகையாய் பலவகைகள் உண்டாம்.

*தானாகப் போகருட கடாட்சத் தாலே*
*தயவாகப் புலிப்பாணி விளக்கச் செய்தேன்*
*வீணாக அவரவர்கள் செய்த கர்மம்*
*விளைந்ததடா நோய்போல அநேகங் கோடி*
*சோனாக வந்தகர்மம் தீர வேண்டி*
*குணமானத் தானதர்மஞ் செய்ய வேண்டும்*
*தேனாகத் தருமங்கள் செய்யா விட்டால்*
*தேகமது நோயிட்ட பாண்ட மாமே! 76*

போகரின் கடாட்சத்தாலே புலிப்பாணியாகிய நான் விளக்கமாகச் சொன்னேன். அவரவர்கள் செய்த கருமம் நோயாக விளையும், வந்த அந்த கருமம் தீருதற்கு தானதர்மம் செய்ய வேண்டும். தர்மம் செய்யாவிட்டால் அநேக நோய்கள் வந்துறும் என்பதாம்.

**செங்கிரந்தி தடிப்பிற்குக் குடிநீர்**

*பாடினேன் கொடிக்கள்ளி பயிறு போலே*
*பாங்காக ஒருதுலாம் பாண்டத் திட்டு*
*நாடினேன் ஒருகுடத்தில் சலத்தை விட்டு*
*நாயகனே எட்டொன்றாய்க் குறுக்கக் காய்ச்சி*
*கூடினேன் வடிகட்டுந் தரந்தா னேழு*
*கொற்றவனே படியரைகா லந்தி சந்தி*
*நாடினேன் திரியாதே கொண்டா யானால்*
*நலமாகச் செங்கிரந்தி தடிப்பு போமே! 77*

கொடிக்கள்ளியைப் பயிறு போல நறுக்கி ஒரு பாண்டத்தி லிட்டு ஒரு குடம் நீர்விட்டு, எட்டிலொன்றாய்க் குறுக்கிக் காய்ச்சி வடிகட்டி ஏழுமுறை தினம் காலை, மாலை இரண்டுவேளைக்கு 165 மி.லி வீதம் குடித்து வந்தால் செங்கிரந்தி, தடிப்பு இவை நீங்கும்.

*போமேநீ மூன்றுநா ளாறுவேளை*
*பொங்கமுடன் மறுபத்தியம் மூன்று நாளாம்*
*நாமேநீ ஆறுநா ளீராறு வேளை*
*நாயகனே உப்பில்லாக் கஞ்சி யாகும்*

*ஆமேநீ ஏழாநாள் பத்தியந் தீரு*
*அடவான விளக்கெண்ணெய் முழுகி வாநீ*
*தேமேநீ கிரந்திவகை எல்லாந் தீரும்*
*திறமாகப் போகருட கடாட்சந் தானே!* 78

மூன்று நாள், ஆறுவேளை உண்டு நான்காம் நாள் முதல் பத்தியம் காக்கவும். ஆறுநாள் பன்னிரெண்டு வேளை உப்பில்லாக் கஞ்சி சாப்பிடவும். ஏழாம்நாள் விளக்கெண்ணெயில் மூழ்கவும். இதனால் கிரந்தி வகைகள் எல்லாம் தீரும்.

### சூலை வாய்விற்கு, மேகத்திற்குத் தைலம்

*என்னவே தயிலமொன்று சொல்லக் கேளு*
*இதமான கொடிவேலி மூலி தானும்*
*பன்னவே துலாமரைதா னிடித்துப் போட்டு*
*பண்பான ஆலின்பட்டை சங்கம் வேரும்*
*தன்னவே வகைக்குவகை துலாமே கால்தான்*
*நாயகனே இத்துடனே கூடச் சேர்த்து*
*அன்னவே தூணிநீர் விட்டுக் காய்ச்சு*
*அப்பனே எட்டொன்றாய்க் குறுக்கி வாங்கே!* 79

கொடிவேலி இலையை 1.75 கி அளவெடுத்து இடித்து ஆலின் பட்டை, சங்கம்வேர் இவை வகைக்கு 875 கி எடுத்து இதனுடன் சேர்த்து 21.5லி நீர்விட்டு எட்டொன்றாய்க் காய்ச்சிக் குறுக்கிக் கொள்ளவும்.

*வாங்கியே எள்ளெண்ணெய் நாழி வாரு*
*வகையாக மிளகுபல மரைத்துப் போட்டு*
*தாங்கியே பசுவெண்ணெய் பலந்தா னொன்று*
*தயவாக வேப்பெண்ணெய் படிகால் வாரு*
*பாங்கியே மெழுகுபதந் தன்னில் வடித்துப்*
*பண்பாக முழுகிவர சூலை ஏகும்*
*தூங்கியே திரியாதே தேக மெல்லாம்*
*துடித்துவிழுந் தேயோடி யெதிர்நில் லாதே!* 80

நல்லெண்ணெய் 1.3லி எடுத்து அதில் 35 கி மிளகரைத்துப் போட்டு பசுவின் வெண்ணெய் 35 கி, வேப்பெண்ணெய் 330 கி சேர்த்து அடுப்பேற்றிக் காய்ச்சி மெழுகு பதமாகும் போது இறக்கி, ஆறியபின் அதனைத் தேய்த்து மூழ்க சூலைநோய் நீங்கும். தலைமூழ்கிய அன்று தூங்காமல் விழித்திருக்க வேண்டும்.

## பிரமேகத்திற்கு எண்ணெய்

*நில்லாத பிரமேகம் தீர வேண்டில்*
*நிச்சயமாய்த் தேங்காய்ப்பால் படிதா னொன்று*
*வல்லான பொடுதலைச்சார் படிதா னொன்று*
*வளமான பிரமிச்சார் படிதா னொன்று*
*நல்லாக எரித்திருந்து எண்ணெய் வாங்கி*
*நாயகனே மூன்றுநா ளாறு வேளை*
*சொல்லாகக் குடித்தவுடன் பிரமி யங்கள்*
*சிறப்பாகத் தீருமடா திண்ணந் தானே!* 81

தேங்காய்ப்பால் 1.3 லி, பொடுதலைச்சாறு 1.3 லி, பிரமிச்சாறு 1.3.லி, இவற்றை எரித்து எண்ணெய் இறக்கிக் கொள்ளவும். இதனை மூன்று நாள் ஆறு வேளை குடித்துவர பிரமேகங்கள் தீரும் என்பதாகும்.

*திண்ணமாய்ப் பத்தியந்தா னாறு நாளும்*
*சிறப்பான ஆவின்பால் ஆகு மல்லால்*
*வண்ணமாய் மற்றொன்று மாகா தப்பா*
*வளமான ஏழாம்நாள் தலையை மூழ்கு*
*உண்ணமாஞ் சிப்பிரமியம் ரத்த பிரமியம்*
*உத்தமனே தீருமடா இந்த எண்ணெய்*
*எண்ணமொன்று இல்லையடா விசனம் போகும்*
*என்னசொல்வேன் எண்ணெயுட வீரந் தானே!* 82

ஆறு நாள் பத்தியம் மேற்கொண்டு ஆவின்பால் மட்டும் பருகி வரவும். மற்றொன்றும் ஆகாது. ஏழாம்நாள் இந்த எண்ணெயில் தலை மூழ்கி வர சீழ்ப்பிரமியம், இரத்தபிரமியம் இவை நீங்கும். இந்த எண்ணெய் உட்கொண்டு வந்தாலும் தீர்ந்துவிடும்.

## மருந்தீட்டிற்கு முறிவு

*போமேநீ மருந்திடு வாந்தி யாக*
*பொங்கமுடன் கரிப்பான்சாறு தன்னை வாங்கி*
*தாமேநீ இருப்புடைய படியி லப்பா*
*தாழ்வாகக் கால்படிச்சார் படியில் தானும்*
*வாமேநீ எலுமிச்சம் பழச்சாறு நேரே*
*வளமாக அந்திசந்திப் படியி லிட்டு*
*ஆமேநீ உதையாதி துடங்கு முன்னே*
*அப்பனே உள்ளுக்குக் கொடுத்தி டாயே!* 83

மருந்தீடு தீருவதற்கு, கரிப்பான் சாறு 330 மி.லி எடுத்து அதே அளவு எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து இரவில் இரும்புப் படியில் வார்த்துக் கொள்ளவும். காலை முதல் மாலை வரை ஊறவிட்டு அதிகாலையில் பருகி வர வாந்தி உண்டாகி மருந்தீடு தீரும்.

*கொடுத்திடவே வாந்தியது காணும் பாரு*
*கொடிதான மருந்திடு எல்லாம் வீழும்*
*அடுத்திடவே வாந்தியது அதிகங் கண்டால்*
*அடவாகப் பச்சரிசிப் பருப்பி னோடு*
*கடுந்திடவே கஞ்சியது கொண்ட போது*
*களங்கமற வாந்தியது நிற்கும் பாரு*
*கொடுத்திடப்பா மருந்திடு தீர்ந்து போச்சு*
*கோசமது விலகிற்று தொழிலைப் பாரே!* 84

வேகமாக வெளியேறும் வாந்தியில் வைத்த மருந்தும் வெளியே வந்துவீழும். வாந்தி அதிகம் காணப்பட்டால் பச்சரிசி பருப்புக் கலந்து கஞ்சியாகச் சாப்பிட வாந்தி நின்று விடும். மருந்தீடும் தீர்ந்து நாம் அன்றாடப் பணிகளைக் கவனிக்கலாம்.

## நீர் எரிச்சலுக்கு மருந்து

*தானென்ற நீரெரிவு கண்ட தானால்*
*தயவாகக் கட்டுக்கொடி இலைய ரைத்து*
*வானென்ற நிம்பக்கா யளவு தானும்*
*வகையாகக் கால்படியாஞ் சலத்தில் சேர்த்து*

*கோனென்ற சீரகமும் ஏலந் தானும்*
*கொடிதாக விராகனிடை பொடித்துப் போட்டு*
*ஆனென்ற சீனிசர்க்கரை தானே துட்டு*
*அழகாகக் கலந்துகொண்டு உண்டு பாரே!* 85

சிறுநீர் கழியும் போது எரிச்சல் உண்டானால் கட்டுக்கொடி இலையை அரைத்த விழுதை வேப்பங்காயளவு உருட்டிக் கொள்ள வேண்டும். சீரகம், ஏலம் இவற்றை வகைக்கு 4கி எடுத்துத் தூளாக்கி 330 மி.லி. தண்ணீரில் கலந்து அதனுடன் மேற்சொன்ன விழுதையும் கலக்கிக் கொள்ளவேண்டும். இதில் சர்க்கரை 488 மி.கி. சேர்த்துக் கலந்து வேளைக்கு 5கி அளவு உண்டு வந்தால் நீர் எரிப்பு குறையும்.

## இடிவல்லாதி

*ஒன்றான வல்லாதி சொல்லக் கேளு*
*உத்தமனே சேங்கொட்டை பலந்தான் பத்து*
*நன்றாக மூக்குவெட்டி சாணிப் பாலில்*
*நலமாக மூன்றுநாள் ஊற வைத்து*
*அன்றான கல்லுரலில் தானே போட்டு*
*அப்பனே எள்ளதனை இடித்துப் போட்டு*
*கன்றான கொப்பரைத் தேங்காய் ரண்டு*
*கனிவாகத் தானிடித்துக் கனிவாய்ப் போடே!* 86

சேங்கொட்டை 350 கி, எடுத்து மூக்கினை வெட்டி சாணிப் பாலில் மூன்று நாட்கள் ஊற வைக்க வேண்டும். இதனைக் கல்லுரலில் போட்டு இடித்தெடுத்து எள்ளையும் சேர்த்து, இரண்டு கொப்பரைத் தேங்காயையும் சேர்த்திடித்துப் போடவும்.

*போடேநீ பரங்கியுட பட்டை யப்பா*
*பொங்கமுடன் அமுக்கிரா சித்திர மூலம்*
*ஊடேநீ கஸ்தூரி மஞ்ச ளோடு*
*குணமான கருஞ்சீரகம் வாலுளுவை யோடு*
*தேடேநீ குரோசாணி ஓமத் தோடு*
*தெளிவான வெற்றிலையின் காம்பு தானும்*

*நாடேநீ கடுக்காய் திப்பிலி தானும்*
*நலமான கோஷ்டம் வகைக்குக் கேளே!* 87

பரங்கிப்பட்டை, அமுக்கிரா, சித்திரமூலம், கஸ்தூரிமஞ்சள், கருஞ்சீரகம், வாலுளுவை அரிசி, குரோசாணிஓமம், வெற்றிலைக் காம்பு, கடுக்காய், திப்பிலி, கோட்டம் இவற்றைச் சேர்த்தெடுத்துக் கொள்ளவும்.

*கேளேநீ வகைக்கோர் பலமாய்த் தூக்கி*
*கெணிதமுடன் சூரணமாய்ச் செய்து கொண்டு*
*வாளேதான் கல்லுரலில் மயனம் போல*
*வகையாக இடித்ததனைச் சொல்லக் கேளு*
*ஆளேதான் ரசகற் பூர மப்பா*
*அடவாக விராகனைந்தே பொடித்துப் போட்டு*
*சாடேதான் பனைவெல்லம் பலந்தா னைந்து*
*சார்வாகப் போட்டிடிப்பாய் தயவாய்த் தானே!* 88

மேற்சொன்ன சரக்குகளை வகைக்கு 35கி வீதம் எடுத்து கல்லுரலில் போட்டு இடித்தெடுத்துக் கொள்ளவும். இதனுடன் இர்சகற்பூரம் 20கி, பனைவெல்லம் 175கி இடித்துச் சேர்த்துக் கொள்ளவும்.

*தானென்ற வல்லாதி அந்தி சந்தி*
*தயவாக ஒருமண் டலமே கொள்ள*
*வானென்ற குட்டமோடு கிரந்தி சூலை*
*வகையாக அரையாப்பு மேக மெல்லாம்*
*கோனென்ற குன்மமெட்டு சுக்கில வாயு*
*குணமில்லா ரணரோகம் கிரந்தி தீரும்*
*ஏனென்ற பத்தியந்தா னிச்சா பத்தியம்*
*இதமான உப்புமுதல் வறுத்துக் கூட்டே!* 89

இந்த வல்லாதியைக் காலை, மாலை இரண்டுவேளை நாற்பது நாட்கள் உட்கொள்ள குட்டம், கிரந்தி, சூலை, அரையாப்பு, மேகம், எட்டுவகைக் குன்மம், சுக்கிலவாயு, இரணநோய்கள், கிரந்தி இவை தீரும். பத்தியம் இச்சாபத்தியம்; உப்பை வறுத்து உணவில் சேர்க்கலாம்.

*கூட்டப்பா தயிருமோரும் நெய்யு மாகும்*
*குணமான துவரையுட பருப்பு மாகும்*
*நாட்டப்பா பாசியென்ற பயிறு மாகும்*
*நலமான நல்லாரை பொன்னாங் காணி*
*ஆட்டப்பா மச்சமென்ற பதார்த்தந் தள்ளு*
*அடவாக மற்றெல்லாம் ஆகும் பாரு*
*ஆட்டப்பா விளக்கெண்ணெய் தேய்த்து முழுகு*
*அடவாகச் சுந்தரம்போல் தேகந் தானே!* 90

தயிர், மோர், நெய் இவற்றை உணவில் சேர்க்கலாம். துவரம் பருப்பு, ப்பாசிப்பருப்பு, நல்ஆரை, பொன்னங்காணி இவற்றைச் சேர்க்கலாம். மீன் பதார்த்தங்களை நீக்க வேண்டும். விளக்கெண்ணெய் தேய்த்துத் தலை மூழ்க மேனி பளபளக்கும்.

## இரசகெந்தி மெழுகு

*பாரேநீ ரசகெந்தி ரசகற் பூரம்*
*பண்பான அரிதாரம் ஊசிக் காந்தம்*
*சீரேநீ துருசுதுத்தம் மிருதார் சிங்கி*
*சிறப்பான சுக்குடனே ஓமம் மஞ்சள்*
*வாரேநீ திப்பிலியு மரத்தை கோஷ்டம்*
*வளமான வாலுளுவை சோம்பு ஏலம்*
*கூரேநீ சாதிக்காய் மிளகு சீரகம்*
*குணமான கார்போகரிசி மாசக் காயே!* 91

இரசம், கெந்தகம், இரசகற்பூரம், அரிதாரம், ஊசிக்காந்தம், துருசு, துத்தம், மிருதார்சிங்கி, சுக்கு, ஓமம், மஞ்சள், திப்பிலி, அரத்தை, கோட்டம், வாலுளுவை, சோம்பு, ஏலம், சாதிக்காய், மிளகு, சீரகம், கார்போகரிசி, மாசிக்காய் இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

*காயான தேசாவரம் வாய்வி ளங்கம்*
*கனிவசம்பு லவங்கமுடன் பரங்கிப் பட்டை*
*தாயான சேங்கொட்டை கடுக்காய்த் தோலும்*
*தயவான கருஞ்சீரகம் காட்டுச் சீரகம்*

*பாயான சிறுதேக்கு தாளிச பத்திரி*
*பண்பான முந்திரிகை பிரம்பின் மூலம்*
*வாயான எட்டிவிரை தேற்றான் வித்து*
*வளமான நீர்ப்பூண்டு எள்ளு மாமே!* 92

திப்பிலிமூலம், வாய்விளங்கம், வசம்பு, இலவங்கம், பரங்கிப்பட்டை, சேங்கொட்டை, கடுக்காய்த்தோல், கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், சிறுதேக்கு, தாளிசபத்திரி, முந்திரிகை, பிரப்பங் கிழங்கு, எட்டிவித்து, தேற்றான்வித்து, நீர்ப்பூண்டு, எள் இவற்றையும் சேகரித்துக் கொள்ளவும்.

*ஆமேநீ கொள்ளுடனே தேங்காய் கூட*
*அடவான சின்னிவேர் சங்கம் வேரு*
*தாமேநீ அமுக்கிரா கொல்லன் கோவை*
*தயவான கொடிவேலி மூலத் தோடு*
*வாமேநீ வகைவகைக்கு விராக னொன்று*
*வளமான கோழிமுட்டை ரண்டு வாரு*
*போமேநீ இவையெல்லாம் பொடியாய்ச் செய்து*
*பொங்கமுடன் கல்லுரலில் போட்டுக் குத்தே!* 93

கொள், தேங்காய், சின்னிவேர், சங்கம்வேர், அமுக்கிரா, கொல்லன் கோவை, கொடிவேலிவேர் இவை வகைக்கு 4கி எடுத்துக் கோழி முட்டை இரண்டை உடைத்துப் போட்டு எல்லா வற்றையும் சேர்த்துப்பொடி செய்து கல்லுரலில் இட்டு இடித்துக் கொள்ள வேண்டும்.

*குத்தப்பா இதுநேரே பனைவெல் லந்தான்*
*குணமாக நால்சாமம் இடித்துத் திரு*
*பெத்தப்பா வழித்தெடுத்து சிமிழில் வைத்து*
*பேதமில்லை சுண்டைக்காய் விதம் கொள்ள*
*முத்தப்பா மோருஞ்சோறு முண்டு முன்னே*
*முசியாமல் மருந்துண்ணு மண்ட லந்தான்*
*சித்தப்பா முழுகுநாள் மருந்துண் ணாதே*
*சிறப்பாக பத்தியந்தா னில்லை தானே!* 94

மேற்சொன்ன இடித்த மருந்து சரக்கின் அளவு பனைவெல்லம் சேர்த்து பன்னிரெண்டு மணிநேரம் தொடர்ந்து இடித்துச் சிமிளில் அடைத்துக் கொள்ளவும். சுண்டைக்காய் அளவு தினம் நாற்பது நாட்கள் சாப்பிட்டுவரவும், மோர்சாதம் சாப்பிடவும். பத்தியம் ஏதுமில்லை.

*தானென்ற வெடிசூலை மேக சூலை*
*தயவான இடிசூலை புடைக்கும் சூலை*
*வானென்ற துடிசூலை வாத சூலை*
*வளமான கால்குடைச்சல் கரணை தீரும்*
*மானென்ற ஆப்புவிப் புருதி மாலை*
*மதியாத குட்டமோடு விஷநீர் தீரும்*
*கோனென்ற குறைநோயுஞ் சிரங்கு தீரும்*
*குணமான புழுவெட்டு தடிப்பு போமே!* 95

இதனை உண்டால் மேகசூலை, வெடிசூலை, இடிசூலை, புடைசூலை, துடிசூலை, வாதசூலை, கால்குடைச்சல், கரணை (கரடு கட்டுதல்), விப்புருதி, கண்டமாலை, குட்டம், விஷநீர், குறைநோய், சிரங்கு, புழுவெட்டு, தடிப்பு போன்ற நோய்கள் குணமாகும்.

*போமேநீ யோனிதன்னில் லிங்கந் தன்னில்*
*பொலிவான ஆமையடி சிலந்தி மேகம்*
*தாமேநீ செங்கிரந்தி கருங்கி ரந்தி*
*தயவான அரிகிரந்தி பொரிகி ரந்தி*
*வாமேநீ பருகிரந்தி இடிகி ரந்தி*
*வளமான இடிவிழுந்து புரைமேல் புண்ணு*
*ஆமேநீ அரைக்கடியும் தண்டிற் புண்ணும்*
*அடவான *குள்ளிமா தேவி யாமே!* 96

யோனிசிலந்தி, லிங்கசிலந்தி ஆமையடிசிலந்தி, மேகம், செங்கிரந்தி, கருங்கிரந்தி, அரிகிரந்தி, பொரிகிரந்தி, பருகிரந்தி, இடிகிரந்தி, புரைமேல்புண், புண்ணின் தழும்பின் மீது மீண்டும்

புண்ணாதல், அரைக்கடி, இடுப்பில் உண்டாகும் தோல் நோய், லிங்கப்புண், குள்ளிமாதேவி இவை நீங்கும்.

*ஆமேநீ துடைவாழை முட்டு வாழை*
*அடவான குழிவாழை முதுகு வாழை*
*சேமேநீ புழுவாழை விலாவில் வாழை*
*செயலான தமர்க்காய் சிலந்தி யோடு*
*ஒமேநீ குறிப்புற்று யோனிப் புற்று*
*ஒளிவான இடிப்புற்று கன்னப் புற்று*
*தாமேநீ பல்சிலந்தி கன்னத் தோசை*
*சதைவளரும் கண்ணோசை போகும் பாரே!* 97

துடைவாழை, முட்டுவாழை, குழிவாழை, முதுகுவாழை, புழுவாழை, விலாவில்வாழை, தமர்க்காய் சிலந்தி, லிங்கப்புற்று, யோனிப்புற்று, இடிப்புற்று, கன்னப்புற்று, பல்சிலந்தி, கன்னத்தோசை, கண்சதை வளர்ச்சி ஆகியன நீங்கும்.

*பாரடா பிளவையோடு பிளவைப் பூச்சி*
*பண்பான ராசனென்ற பிளவை யோடு*
*கூரடா நேத்திரமேல் பிளவை யோடு*
*கொடிதுதடி சிலந்திபுடை சிலந்தி யோடு*
*தேரடா பவுந்திரங்கள் முளைமூ லங்கள்*
*நெடியபத மெட்டுசக் கரத்தி னோடு*
*வீரடா இவைகளெல்லா தீரும் தீரும்*
*விதமாகப் போகருட கடாட்சந் தானே!* 98

பிளவை, பிளவைப்புழு, இராசபிளவை, நேத்திரப்பிளவை, உதட்டுச் சிலந்தி, புடைச்சிலந்தி, பவுத்திரங்கள், முளைமூலங்கள் ஆகிய நோய்கள் எல்லாம் எட்டு சக்கரங்களாலும் போகரின் அருளாலும் குணமாகும் என்பதாகும்.

### மூலமுளைக்கு மருந்து

*உண்ணப்பா சிவகரந்தை விஷ்ணு கிரந்தி*
*உத்தமனே அரைத்துமுள் ளிக்காய் விதம்*
*பண்ணப்பா கொள்மூல முளைக ளெல்லாம்*
*பதறியே உதிர்ந்துவிடும் கண்டு பாரு*

*நண்ணப்பா பத்தியங்க ளிதற்கோ யில்லை*
*நாயகனே ஈராறு நாளுக் குள்ளே*
*துண்ணப்பா தீர்ந்துவிடுங் கண்டு பாரு*
*திறமான போகருட கடாட்சந் தானே! 99*

சிவகரந்தை, விஷ்ணுகிரந்தி இரண்டையும் அரைத்து நெல்லிக்காய் அளவு எடுத்து உண்டுவர மூலமுளை உதிர்ந்துவிடும். இதற்குப் பத்தியமில்லை. பன்னிரெண்டு நாட்கள் சாப்பிட்டுவர முளை உதிர்ந்துவிடும்.

## வாய்விற்கு மருந்து

*திண்ணமாய் சங்கம்வேர் மூக்கொ ழுஞ்சி*
*திறமான கொடிவேலி பரங்கிப் பட்டை*
*உண்ணமாய் சுக்குடனே வாய்வி ளங்கம்*
*வளமான சிறுதேக்கு கொத்த மல்லி*
*எண்ணமாய் வகைவகைக்கு விராகன் ரண்டு*
*இடித்தெடுத்து பாண்டத்தி லிதமாய்ப் போட்டு*
*கண்ணமாய் சலமதுதான் படிதான் விட்டு*
*நாயகனே எட்டொன்றாய்க் குறுக்கி வாங்கே! 100*

சங்கம்வேர், முற்றிய கொழுஞ்சி, கொடிவேலி, பரங்கிப்பட்டை, சுக்கு, வாய்விடங்கம், சிறுதேக்கு, கொத்துமல்லி இவை வகைக்கு 8 கி. வீதம் எடுத்து இடித்துப் பாண்டத்திலிட்டு 1.3 லி. தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து எட்டொன்றாய்க் காய்ச்சிக் குடிக்கவும்.

*வாங்கியே மிளகதுவும் விராக னொன்று*
*வளமாகப் பொடிபண்ணி இதனில் போட்டு*
*தாங்கியே விளக்கெண்ணெய் துட்டெடைதான் விட்டு*
*தான்கொடுப்பாய் மூன்றுநா ளாறு வேளை*
*ஏங்கியே புளிபுகையுந் தள்ளு தள்ளு*
*விதமான வாயுடனே மேக வாயு*
*ஓங்கியே மேகக்கடுப்பு புளித்த ஏப்பம்*
*ஓடிவிடும் வாயுவெல்லாந் தீருந் தானே! 101*

4.கி மிளகு எடுத்துப் பொடிசெய்து இதனுடன் சேர்த்து விளக்கெண்ணெய் 4.கி சேர்த்து மூன்று நாள் ஆறுவேளை கொடுக்கவும். புளியும் புகையும் தள்ள வேண்டும். வாயு, மேகவாயு, மேகக் கடுப்பு, புளித்தேப்பம் எல்லாம் நீங்கும்.

## சூட்டிற்குக் குடிநீர்

*தீருமே இன்னமொன்று சொல்லக் கேளு*
*திறமான இளநீரு படிதான் மூன்று*
*ஆருமே எலுமிச்சம் பழச்சாறு நாழி*
*அப்பனே சுண்ணநீர் தெளிவு தானும்*
*ஏருமே படியரைதா னளந்து வாரு*
*இசையான குமரிச்சாறு பலந்தா னாறு*
*வீருமே சீரகமும் பலந்தா னொன்று*
*விதமான ஏலமரைப் பலந்தான் போடே!* 102

இளநீர் 3.9 மி.லி. எலுமிச்சம்பழச்சாறு 1.3 லி, சுண்ணத் தெளிவு 650 மி.லி, குமரி எனும் கற்றாழைச்சாறு 210 மி.லி, சீரகம் 35 கி, ஏலம் 18 கி இவற்றைச் சேகரித்துக் கொள்ளவும்.

*போடேநீ ஏலமதைப் பொடித்துப் போட்டு*
*பொங்கமுடன் புதுச்சட்டி தன்னில் சேர்த்து*
*நாடேநீ மணலிட்டு ஈரஞ் செய்து*
*நாயகனே இதுமேல் சட்டி வைத்து*
*கூடேநீ ஈரச்சீலை அதனால் மூடி*
*குணமாக வைத்திருநீ பகற்கா லந்தான்*
*சாடேநீ ராக்காலம் பனியில் வைத்து*
*சார்வாக மண்டலமும் கால்தான் கொள்ளே!* 103

ஏலத்தைப் பொடித்துப்போட்டு, எல்லாவற்றையும் புதுச் சட்டியில் போட்டு மணலை நனைத்து அதன் மேலே இச்சட்டியை வைத்து சட்டிமூடி சீலை செய்து, சீலையில் தண்ணீர்விட்டு இரவில் பனியில் வைத்து எடுத்து பன்னிரெண்டு நாட்கள் உட்கொண்டு வரவும்.

*கொள்ளவே கால்படிதா னந்தி சந்தி*
*குணமாகக் குமரிச்சாறு பலமுங் காலு*
*உள்ளேநீ கொண்டுவர இந்த பாகம்*
*உத்தமனே நீரெரிவு ரத்தம் வெள்ளை*
*தள்ளேநீ உள்ளெரிவு கடுப்புத் தீரும்*
*தயவில்லா காங்கையது தணியும் பாரு*
*அள்ளேநீ போகருட கடாட்சத் தாலே*
*அடைவாகப் புலிப்பாணி பாடி னேனே!* 104

இதில் 325 மி.லி எடுத்து கற்றாழைச் சாறு 8 கி சேர்த்துப் பருகி வரவும். இதனால் நீரெரிச்சல், இரத்தப்போக்கு, வெள்ளைப் போக்கு, உள்ளெரிச்சல், கடுப்பு, காங்கை இவை தணியும். இதனைப் போகரின் கடாட்சத்தால் புலிப்பாணியாகிய நான் பாடினேன்.

### உஷ்ண காங்கைக்குக் குடிநீர்

*தானேதான் இன்னமொன்று சொல்லக் கேளு*
*தயவான அருகன்வேர் நெருஞ்சில் வேரும்*
*மானேதான் முருங்கையுட ஈர்க்கு மப்பா*
*மைந்தனே வகைவகைக்குப் படிதா னொன்று*
*வானேதான் பொடிப்பொடியாய் நறுக்கிப் பொன்போல்*
*வறுக்கையிலே சீரகமி ளகும் போட்டு*
*ஆனேதான் கசகசா விராகன் ரண்டு*
*அப்பனே தான்போட்டு சலத்தை வாரே!* 105

அருகன்வேர், நெருஞ்சில்வேர், முருங்கைஈர்க்கு இவை வகைக்கு 1300 மி.கி எடுத்துப் பொடித்து வறுக்கும்போது சீரகமும் மிளகும் சேர்த்து கசகசா 8கி சேர்த்து 1.3லி. தண்ணீர் வார்த்து கொதிப்பிக்கவும்.

*வாரேநீ படிசலந்தான் எட்டொன் றாக்கி*
*வளமாகப் பசுவெண்ணெய் கழஞ்சு போட்டு*
*சேரேநீ கொடுத்தவுடன் உஷ்ண காந்தல்*
*சேர்ந்துவந்த வயிற்றுவலி கடுப்பு தீரும்*

*கூறேநீ இந்தவிதம் மூன்று நாள்தான்*
*கொடுத்திடவே உஷ்ணத்தால் காங்கை தீரும்*
*தீரேநீ போக ருட கடாட்சத் தாலே*
*திறமாகப் புலிப்பாணி சொன்னேன் தானே!* 106

அக்குடிநீர் எட்டிலொன்றாய்ச் சுருங்கியபின் எடுத்துக் கொள்ளவும். அதில் 5கி பசுவெண்ணெய் சேர்த்துக் கொடுக்கவும். இதனால் உஷ்ணகாந்தல், வெப்பத்தால் உண்டான வயிற்றுவலி, கடுப்பு இவை தீரும். இவ்வாறு மூன்று நாள் கொடுத்துவர உடல் காங்கைகள் நீங்கும்.

### குடைச்சலுக்குத் தைலம்

*தானையா மயிற்பீலி பலந்தான் ரண்டு*
*தான்போட்டு சட்டியிலே கருக்கிக் கொண்டு*
*வானையா மனோசிலைதான் விராகன் பத்து*
*வளமாகத் தான்போட்டு உருகும் போது*
*சேனையா வேப்பெண்ணெய் படிதான் விட்டு*
*செயலாகத் தானெரித்து எடுத்துக் கொண்டு*
*பானையா பூசியல்லோ பிடிக்கும் போது*
*மைந்தனே குடைச்சல்முதல் குத்துப் போமே!* 107

மயிற்பீலிகை 70கி எடுத்துச் சட்டியில் போட்டு கருக்கிக் கொண்டு மனோசிலை 40கி சேர்த்துக்காய்ச்சவும். உருகும்போது வேப்பெண்ணெய் 1.3லி சேர்த்து எரித்துக் கொள்ளவும். உடம்பில் பூசி ஒற்றடம் கொடுக்கும்போது குடைச்சல், குத்தல் இவை நீங்கும்.

*போமேநீ இலைக்கள்ளி கொண்டு வந்து*
*பொடிப்பொடியாக் கண்டமதாய் நறுக்கிப் போட்டு*
*நாமேநீ சலமதுதான் பதக்கு விட்டு*
*நலமாக எட்டொன்றாய்க் குறுக்கிக் கொண்டு*
*தாமேநீ மறுசட்டி தனிலி றுத்து*
*தயவாக வெள்ளாட்டு அமுரி தானும்*
*வாமேநீ படிரெண்டு கூட விட்டு*
*வளமாகப் பாகுபோல காய்ச்சி டாயே!* 108

இலைக்கள்ளியைப் பொடிப்பொடியாய் நறுக்கி 10.7லி தண்ணீரில் போட்டு எரித்து எட்டில் ஒன்றாகக் குறுக்கி, மற்றொரு சட்டியில் இறுத்துக் கொண்டு, வெள்ளாட்டு மூத்திரம் 2.6லி சேர்த்துப் பாகுபதம் வரும் வரை காய்ச்சி இறக்கவும்.

*காய்ச்சியே மேலெங்கும் பூசச் சொல்லி*
*கனிவாக ஆட்டுத்தோல் கலைத்தோல் தன்னில்*
*ஆச்சியே படுத்திருக்கச் சொல்வாய் நீயும்*
*அப்பனே சாயரட்சை தன்னில் கேளு*
*வாச்சியே நொச்சியிலை முடக்கத் தானும்*
*வளமாகத் தழுதாழை மாவி லிங்கம்*
*தாச்சியே மேனியுடன் தும்பை கொண்டு*
*தயவாகப் பூவரசம் பட்டை யாமே!* 109

காய்ச்சியபின் மேலெங்கும் பூசி ஆட்டுத்தோல் அல்லது மான்தோலில் படுக்க வைக்கவும். நொச்சிஇலை, முடக்கறுத்தான் இலை, தழுதாழை இலை, மாவிலிங்க இலை, குப்பைமேனி, தும்பை, பூவரசம்பட்டை

*ஆமேநீ எட்டியப்பா வட்டை வாகை*
*அடவாக எருக்கம்பூ கடம்பின் பட்டை*
*தாமேகாட் டெலுமிச்சை இலையி னோடு*
*தயவாக உத்தாமணி திருகு கள்ளி*
*வாமேநீ இலுப்பையுட பட்டை தானும்*
*வளமான நெல்லுமி வைக ளெல்லாம்*
*போமேதான் சலம்விட்டு வேக வைத்து*
*பொங்கமுடன் மூன்றுநாள் போத வாரே!* 110

எட்டி, பாவட்டை, வாகை, எருக்கம்பூ, கடம்பின்பட்டை, காட்டெலுமிச்சம் இலை, உத்தாமணி, திருகுகள்ளி, இலுப்பைப் பட்டை, நெல் இவற்றை நீர்விட்டு வேகவைத்து மூன்று நாட்கள் சாப்பிடவும்.

*வாரேதான் அந்திசந்தி வார்த்த போது*
*வளமில்லா சூலையோடு பிடிப்பு தானும்*

*மீரேதான் கால்குடைச்சல் கைகு டைச்சல்*
*மிகுந்ததொரு மேல்கடுப்பு குத்து தீரும்*
*பாரேதான் சருவாங்க வாதம் போகும்*
*பண்பான புடைசூலை கருணை பாதம்*
*தீரேதான் போகருட கடாட்சத் தாலே*
*திறமாக புலிப்பாணி சொன்ன தாமே!* 111

காலை, மாலை இரண்டுவேளை சாப்பிட்டு வர தலைப்பிடிப்பு, கைகால் குடைச்சல், உடல் கடுப்பு, குத்து, சர்வாங்க வாதம், புடைசூலை, ஆகியவை தீருமென்பதை புலிப்பாணியாகிய நான் போகர் அருளால் சொன்னேன்.

### வயிற்றிரைச்சல், பேதிக்கு மருந்து

*சேரேநீ இன்னமொன்று சொல்லக் கேளு*
*செயலான மிளகுபலம் ரண்டு வாங்கி*
*நேரேநீ வேலியுட பருத்திச் சாறு*
*நிறையவிட்டு ஊறவைத்து உலரப் போடு*
*கூரேநீ வறுத்துமிகப் பொடியாய்ச் செய்து*
*கொற்றவனே வெருகடியாய்த் தேனில் கொள்ள*
*வீரேநீ வயிற்றிரைச்சல் வயிற்று நோய்கள்*
*விதமான பொருமலுட வாயு போமே!* 112

70கி மிளகை வேலிப்பருத்திச் சாற்றில் ஊறவைத்து, உலர்த்தி வறுத்துப் பொடிசெய்து மூவிரல் அளவு, தேனில் சாப்பிட்டு வர வயிற்றிரைச்சல், வயிற்று நோய்கள், பொருமல், வாயு இவை நீங்கும்.

### வயிற்றிரைச்சல், இரத்தக் கடுப்பிற்கு மருந்து

*போமேநீ இன்னமொன்று சொல்லக் கேளு*
*பொலிவாக நீர்ப்பூண்டு பலந்தான் ரண்டு*
*ஆமேநீ எழுத்தாணி இலையைத் தானும்*
*அடவாக ரண்டுபல மெடுத்துக் கொண்டு*
*தாமேநீ நெய்தனிலே வதக்கிமைந்தா*
*தயவாக ஏலமது விராக னொன்று*

*வாமேநீ சீனிபல மொன்று கூட்டி*
*வகையாகத் தானரைத்து எடுத்துக் கொள்ளே!* 113

நீர்ப்பூண்டு 70கி, இதனுடன் 70கி எழுத்தாணிப் பூண்டு இலையையும் சேர்த்து நெய்யில் வதக்கி, ஏலம் 4கி கூட்டி அரைத்து எடுத்துக்கொள்ள வேண்டும்.

*கொள்ளவே முள்ளிக்காய் வித மாக*
*கொற்றவனே மூன்றுநா ளாறு வேளை*
*தெள்ளப்பா வயிற்றிரைச்சல் கடுப்பு ரத்தம்*
*தெளிவில்லாக் குன்மம் சூடுந் தீரும்*
*அள்ளப்பா பத்தியந்தா னிதற்கோ இல்லை*
*ஐயனே தயிர்பாலும் நெய்யுங் கூட்டு*
*விள்ளப்பா போகருட கடாட்சத் தாலே*
*விதமாகப் புலிப்பாணி பாடி னேனே!* 114

முள்ளிக்காய் அளவு மூன்று நாள், ஆறுவேளை உண்டுவர வயிற்றிரைச்சல், கடுப்பு, இரத்தப்போக்கு, செரியாமை, சூடும் தீரும். இதற்குப் பத்தியம் ஏதுமில்லை. தயிர், பால், நெய் சேர்த்துக் கொள்ளலாம்.

# பின்னிணைப்பு - 1

## பாடல் முதற் குறிப்பகராதி


**எண் - பாடல் எண்**

அஞ்சான - 6
அரைத்தெடுத்து - 56
அறிந்த பின்பு - 67
ஆமேநீ - 8, 23, 27, 58, 63, 93, 97, 110
இல்லான - 72
உண்டான - 74
உண்ணப்பா - 99
என்னவே - 79
ஒன்றான - 10, 36, 86
காப்பாக - 1
காயான - 92
காய்ச்சியே - 109
கானென்ற - 12
குத்தப்பா - 94
கூட்டப்பா - 25, 57, 90
கேளேநீ - 18, 22, 68, 88
கொடுத்திடப்பா - 51
கொடுத்திடவே - 48, 84
கொடுத்திடுவாய் - 11
கொள்ளடா - 21
கொள்ளவே - 54, 104, 114
சாறென்ற - 14
சேரேநீ - 5, 112
சொல்லப்பா - 53
சொல்லுவேன் -20
தானப்பா - 17
தானாக - 34, 52, 76
தானாகும் - 70
தானான - 65
தானென்ற - 39, 45, 50, 55, 60, 75, 85, 89, 95
தானேதான் - 15, 43, 105
தானேநீ - 9
தானையா - 107
திண்ணமாய் - 82, 100
தீருமப்பா - 41
தீருமே - 102
தேரேநீ - 3
நாளான - 64
நில்லாத - 81
பாடியதோர் - 47
பாடினேன் - 31, 77
பாரடா - 98
பாரப்பா - 32, 38. 44
பாரே நீ - 30, 37, 42, 69, 91
பாலப்பா - 35
பூசியே - 40
பொய்யில்லை - 73
போடப்பா - 49
போடேநீ - 87, 103
போமப்பா - 33, 46
போமேநீ - 4, 59, 78, 83, 96, 108, 113
போன பின்பு - 66
முழுகையிட்டு - 24
மூட்டப்பா - 26
மூன்றாக - 16
வாங்கியே - 7, 80, 101
வார்த்தவுடன் - 29
வாரப்பா - 62
வாரேதான் - 111
வாரேநீ - 28, 106
விளங்கவே - 13
விளம்புகிறேன் - 61, 71
விளம்புவேன் - 19
வைத்தவுடன் - 2

# பின்னிணைப்பு - 2

## நோய்கள் அகர முதலி


**எண் - பாடல் எண்**

*அகுவை - 11*
*அரிகிரந்தி - 96*
*அரைகடி - 96*
*அரையாப்பு - 61, 89*
*ஆமையடி சிலந்தி - 96*
*இடிக்கிரந்தி - 96*
*இடிச்சூலை - 95*
*இடிப்புற்று - 97*
*இரணநோய்கள் - 17, 89*
*இரத்த பிரமியம் - 82*
*இரத்தப்போக்கு - 104, 114*
*இராசப்பிளவை - 98*
*இலிங்கச்சிலந்தி - 96*
*இலிங்கப் புண் - 96*
*இலிங்கப் புற்று - 97*
*உடல் கடுப்பு - 111*
*உதட்டுச் சிலந்தி - 98*
*உள்ளெரிச்சல் - 104*
*உஷ்ண காந்தல் - 106*
*எலிக்கடி (18 க்கும்) - 37*
*கடுப்பு - 104, 106, 114*
*கண் சதை வளர்ச்சி - 97*
*கண்ட மாலை - 95*
*கரணை - 95*
*கருங்கிரந்தி - 96*
*கவிச்சை - 11*
*கன்னப்புற்று - 97*
*காங்கை - 104*
*காதுநோய்கள் - 14*
*கால்குடைச்சல் - 95, 111*
*கிரந்தி சூலை - 89*
*கிரந்தி வகைகள் - 64, 78, 89*
*கிரிச்சனங்கள் - 11*
*குடைச்சல் - 7, 107*
*குட்டம் - 50, 89, 95*
*குத்தன் - 107, 111*
*குழிவாழை - 97*
*குறைநோய் - 95*
*குன்மநோய்கள் - 9, 89*
*கெண்டைவலி - 11*
*சகல விஷம் 47, 48*
*சர்வாங்க வாதம் - 111*
*சன்னி - 7, 21, 23,. 24, 29*
*சிரங்கு - 95*
*சிலந்தி - 97*
*சிறுபாம்புகடி - 49*
*சீழ்ப்பிரமியம் - 82*
*சுக்கிலவாய்வு - 89*
*சுரம் - 3*
*சூடு - 114*
*சூலை நோய் - 80*
*சூலை ரணம் - 18*
*செங்கிரந்தி - 77, 96*
*செய்யான்கடி - 45*
*சோகை - 11*
*தடிப்பு - 77, 95*
*தலைப்பிடிப்பு - 111*
*திரிகடி - 39*
*துடிசூலை - 95*
*துடைவாழை - 97*
*தேள்கடி - 46*
*தொந்தம் - 11*
*தோஷம் - 29*

நஞ்சு - 54
நாய்கடி - 39
நீரடைப்பு - 12
நீரில் இரத்தம் காணுதல் - 31
நீர் எரிச்சல் - 85, 104
நேத்திரப்பிளவை - 98
படர்தாமரை - 43
பருகிரந்தி - 96
பல்சிலந்தி - 97
பல்வலி - 16
பவுந்திரங்கள் - 98
பித்தம் - 58
பித்த வெடிப்பு - 30
பிரமேகம் - 81
பிரமை - 58
பிளவை - 98
பிளவைப்பூச்சி - 98
புடைச்சிலந்தி - 98
புடை சூலை - 95, 111
புரைமேல் புண் - 96
புழுவாழை - 97
புழுவெட்டு - 95
புளித்தேப்பம் - 101
பூரான்கடி - 44
பூனைக்கடி - 40
பெருச்சாளிக்கடி - 45
பெரும்பாடு - 8
பொரிகிரந்தி - 96
பொருமல் - 11, 112
மயக்கம் - 21
மருந்தீடு - 43, 52, 83, 84
முகசன்னி - 22
முட்டுவாழை - 97
முதுகுவாழை - 97
முளைமூலம் - 98, 99
மூலநோய் - 59
மேகக் கடுப்பு - 101
மேக சூலை - 95
மேக வகைகள் - 34, 43, 89, 96
மேகவாய்வு- 101
மேனி பளபளப்பு - 36, 90
யோனிச் சிலந்தி - 96
யோனிப்புற்று - 97
வண்டுகடி - 41, 42
வயிற்றிரைச்சல் - 112, 114
வயிற்று நோய்கள் - 112
வயிற்று வலி - 106
வலிப்பு - 29
வாதசூலை - 95
வாதம் - 7
வாந்தி - 83, 84
வாய்நாற்றம் - 36
வாய்வு - 11, 32, 33, 100, 101, 112
விக்கல் - 19
விப்புருதி - 95
விஷக்கடிகள் - 43
விஷநீர் - 95
விஷம் -21
விலாவில் வாழை - 97
வெடிசூலை - 95
வெள்ளைப் போக்கு - 104

# பின்னிணைப்பு - 3

## மருந்துச் சரக்குகள் அகர முதலி


**எண் - பாடல் எண்**

அதிமதுரம் - 35
அமுக்கிரா - 87, 93
அமுரி - 2
அரத்தை - 24, 91
அரிதாரம் - 91
அறுகங்கிழங்கு - 59
அறுகன்வேர் - 34, 45, 105
ஆகாசக் கருடன் - 6
(வெண் தோன்றி)
ஆடுதொடா மூலி- 41
ஆட்டுத்தோல் - 109
ஆதண்டை - 34
ஆரைவேர் - 59
ஆலம்பட்டை - 22
ஆவின்பட்டை - 79
ஆவின் பால் - 82
இஞ்சி - 27, 56
இரும்பு அரப்பொடி - 15
இந்துப்பு - 9
இரச கற்பூரம் - 17, 25, 88, 91
இரசகெந்தி - 91
இரச பதங்கம் - 43
இலவங்கம் -92
இலிங்கம் - 17
இலுப்பைப்பட்டை - 110
இலைக்கள்ளி -108
இளநீர் - 34, 102
உடுதுரத்தி - 61
உத்தாமணி - 110
உப்பு - 9
உளுந்து - 1
ஊசிக்காந்தம் - 91
எட்டி - 47, 92, 110
எருக்கம் பால் - 1
எருக்கம்பூ - 44, 110
எருமைமோர் - 8,9
எலுமிச்சைப் பழம் - 16,55,58,83,102
எழுத்தாணிப் பூண்டு - 113
எள் - 86, 92,
எள்ளெண்ணெய் - 80
ஏலம் - 35, 85, 91, 102, 103, 113
ஐங்காயம் - 6
ஒட்டடைத்தூள் - 28
ஓமம் - 6, 22, 25, 91
கசகசா - 105
கட்டுக்கொடி - 85
கடம்பு - 110
கடுக்காய் - 17, 87, 92
கபாலம் - 55
கரிப்பான் - 83
கருங்கோழி முட்டை - 13
கருஞ்சீரகம் - 13, 62, 87, 92
கருணைக் கிழங்கு - 59
கருநாபி - 5
கருநொச்சி - 61
கரும்பூனை மலம் - 37
கள்ளி - 13
கற்றாழை - 102, 104
கஸ்தூரி மஞ்சள் - 63, 87
காசுக்கட்டி - 15, 17
காடி - 34, 54
காட்டுக் கருணைக் கிழங்கு - 59
காட்டுச் சீரகம் - 92
காட்டெலுமிச்சம் இலை - 110
கார்த்திகைக் கிழங்கு நீர் - 5,6

கார்போகரிசி - 62, 91
கிரந்தி நாயகம் - 61
கிராம்பு - 20. 25, 35
குரோசாணி ஓமம் - 87
கூகை நீறு - 35
கொடிக்கள்ளி - 77
கொடிவேலி - 32, 33, 79, 93, 100
கொடுக்காய் புளி - 15
கொத்துமல்லி - 35, 100
கொப்பரைத் தேங்காய் - 86
கொல்லங்கோவை - 45, 93
கொள்ளு - 93
கோஷ்டம் - 87, 91
கோழிமுட்டை - 93
கௌரி - 1
சங்கங்குப்பி - 61
சங்கம்வேர் - 79, 93, 100
சங்கு - 61
சதகுப்பை - 6, 22, 25
சந்தனம் - 8, 19
சர்க்கரை - 36, 52, 56, 85
சவுட்டுப்பு - 9
சாணிப்பால் - 34, 86
சாதிக்காய் - 6, 35, 91
சாம்பிராணி - 19, 24
சித்திரமூலம் - 87
சிவகரந்தை -99
சிறுகீரைவேர் - 4
சிறுகுறிஞ்சான்வேர் - 49
சிறுதேக்கு - 92, 100
சிறுநாகப்பூ - 35
சிறுநீர் - 48
சிறுபீளை - 48
சின்னி -61, 93
சீரகம் - 35, 85, 91, 102, 105
சீனக்காரம் - 15, 35
சுண்ணத்தெளிவு - 102
சூடன் - 24
செவ்வலரி - 50
சேங்கொட்டை - 86, 92
சோம்பு - 91
ஞானிமலம் - 44
தழுதாழை - 109
தாளிசபத்திரி - 92
தான்றிக்காய் - 15, 17
திப்பிலி - 24, 87, 91
திருகுகள்ளி - 2, 61, 110
தினையரிசி - 41
துத்தம் - 91
தும்பை - 57, 109
துருசு - 15, 48, 91
தாதுவேளை - 59
தேங்காய் - 93
தேங்காய் எண்ணெய் - 22
தேங்காய்ப்பால் - 52, 81
தேசாவரம் - 25, 92
தேற்றான்வித்து - 92
தேன் - 60, 112
நண்டுடிறைச்சி - 13
நத்தை - 13
நாவல்பட்டை - 8
நீர்ப்பூண்டு - 34, 60, 61, 92, 113
நீலிவேர் - 40, 42, 54
நெய் - 110, 113
நெருஞ்சிவேர் -105
நொச்சி - 22, 109
பசுவின் நெய் - 14
பசுவின் பால் - 30, 34, 40, 53
பசுவின் வெண்ணெய் - 18, 80, 106
பச்சரிசி - 58, 84

படிகாரம் - 55
பரங்கிப்பட்டை - 32, 62, 87, 92, 100
பருப்பு - 20, 58, 84
பனைவெல்லம் - 88, 94
பாவட்டை - 110
பிரண்டை - 59
பிரப்பங்கிழங்கு -32, 92
பிரமி - 81
புழுங்கரிசி - 31
பூண்டுத் தைலம் - 27
பூவரசம்பட்டை - 61, 109
பூனைவணங்கிபட்டை - 40
பெருங்காயம் - 22, 25
பெருமரப்பட்டை - 22
பெரியாநங்கைவேர் - 46
பேய்க்கும்மட்டி - 57
பேய்த்தும்பை - 57
பேய்ப்பீர்க்கு - 57
பேய்ப்புடல் - 57
பேய்மிரட்டி - 57
பேயத்தி - 57
பொடுதலைச்சாறு - 81
பொன்னாங்காணி - 34
மஞ்சள் - 91
மட்டிப்பால்புகை - 46
மணத்தக்காளிச்சாறு - 39
மயிர்ப்பீலி - 24, 45, 107
மரமஞ்சள் - 13
மருட்கிழங்கு - 59
மருதுஇலை - 30
மனோசிலை - 107
மாசிக்காய் - 15, 17, 91
மாவிலிங்கம் - 22, 109
மான்தோல் - 109
மிருதார்சிங்கி - 17, 91
மிளகரணை - 59
மிளகு - 1, 4, 20, 25. 80, 91, 101, 105, 112
முடக்கறுத்தான் - 109
முசுறுமுட்டை - 13
முருங்கை - 13, 21, 53
முருங்கை ஈர்க்கு - 105
முந்திரிகை - 92
மூக்கொழுஞ்சி - 100
வசநாபி - 5
வசம்பு -22, 42, 63, 92
வரிக்கும்மட்டி - 9
வலம்புரிக்காய் - 13
வல்லாரை - 34
வளையலுப்பு - 9
வாகை - 110
வாய்விளங்கம் - 92, 100
வாலுளுவை - 87, 91
வாழைக்கிழங்கு - 12
விராலிஇலை - 31
வில்வஇலை -34
விளக்கெண்ணெய் - 34, 78, 90, 101
விஷ்ணுகிரந்தி - 99
வெடியுப்பு -9, 12
வெந்தயம் - 35
வெள்ளறுகு - 61
வெள்ளாட்டுப்பால் - 41, 42
வெள்ளாட்டு மூத்திரம் - 108
வெள்ளைக்குங்கிலியம் - 17
வெள்ளைப்பூண்டு - 5, 13, 22, 63
வெற்றிலை - 20, 87
வேப்பெண்ணெய் - 5, 14, 24, 47, 80, 107
வேலிப்பருத்தி - 112

# இந்திய மருத்துவம் ஓமியோபதித் துறை நூலகங்களில் விற்பனையாகும் நூல்களின் விலை விவரப்பட்டியல்

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 1. | குணபாடம் - மூலிகை | 800 | 300.00 |
| 2. | குணபாடம் - தாது சீவ வகுப்பு | 800 | 250.00 |
| 3. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 1 | 700 | 200.00 |
| 4. | நோய்களுக்குச் சித்த பரிகாரம் - பாகம் 2 | 200 | 25.00 |
| 5. | நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 1 | 500 | 200.00 |
| 6. | நோய் நாடல் நோய் முதனாடல் திரட்டு - பாகம் 2 | 800 | 250.00 |
| 7. | சிறப்பு மருத்துவம் | 500 | 220.00 |
| 8. | மகளிர் மருத்துவம் | 450 | 160.00 |
| 9. | நோயில்லா நெறி | 500 | 67.20 |
| 10. | சட்டம் சார்ந்த மருத்துவமும் நஞ்சு நூலும் | 800 | 250.00 |
| 11. | சித்த வைத்திய திரட்டு | 500 | 150.00 |
| 12. | சூல் மருத்துவம் | 450 | 150.00 |
| 13. | அறுவை மருத்துவம் | 500 | 150.00 |
| 14. | குழந்தை மருத்துவம் | 800 | 210.00 |
| 15. | உடற்கூறு | 1000 | 400.00 |
| 16. | நஞ்சு முறிவு நூல் | 300 | 100.00 |
| 17. | உடல் தத்துவம் | 450 | 75.15 |
| 18. | சித்த மருத்துவம் - பொது | 800 | 250.00 |
| 19. | யூகி வைத்திய சிந்தாமணி | 500 | 150.00 |
| 20. | தேரையர் யமக வெண்பா - பாகம் 1 | 300 | 80.00 |
| 21. | கடுக்காய் வல்லாரையின் தனி மாண்பு | 500 | 29.00 |
| 22. | நல்வாழ்விற்கு ஓர் நல் மருத்துவம் | 50 | 3.00 |

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 23. | பிணி உடல் தேர்வக ஆய்வு முறைகள் | 50 | 30.30 |
| 24. | தோற்றக் கிராம ஆராய்ச்சியும் சித்த மருத்துவ வரலாறும் | 500 | அச்சில் |
| 25. | சித்த மருத்துவாங்கச் சுருக்கம் | 800 | 300.00 |
| | **Siddha Medical Books in English** | | |
| 1. | A Compendium of Siddha Doctrine | 500 | 200.00 |
| 2. | Introduction to Siddha Medicine | 50 | 11.35 |
| 3. | Simple Home Remedies | 50 | 2.70 |
| 4. | Hospital Siddha Pharmacopoeia in Indian Medicine | 250 | 39.00 |
| 5. | History of Siddha Medicine | 800 | 159.00 |
| 6. | Siddha Science of Longevity and Kalpa Medicine | 250 | 25.00 |
| 7. | Siddha Toxicology | 500 | 44.00 |
| 8. | Siddha Principles of Social & Preventive Medicine | 500 | 66.00 |
| 9. | Speciality Medicines and Treatment in Siddha | ... | அச்சில் |
| 10. | Therayar Maha Karisal | ... | அச்சில் |
| 11. | Treatment of Diseases in Siddha Part - I | ... | அச்சில் |
| 12. | Anuboga Vaidya Navaneetham | ... | அச்சில் |
| | **Siddha Medical Dictionary** | | |
| 1. | T.V. Sambasivam Pillai - Vol. I | 2500 | 623.00 |
| 2. | T.V. Sambasivam Pillai - Vol. II - Part I | 500 | 300.00 |
| 3. | T.V. Sambasivam Pillai - Vol. II - Part II | 450 | 200.00 |
| 4. | T.V. Sambasivam Pillai - Vol. III | 650 | 81.00 |
| 5. | T.V. Sambasivam Pillai - Vol. IV - Part I | 800 | 156.00 |

| வ. எண். | நூல்களின் பெயர் | எடை (கிராமில்) | விலை ரூ. பை. |
|---|---|---|---|
| 6. | T.V. Sambasivam Pillai - Vol. IV - Part II | 800 | 151.50 |
| 7. | T.V. Sambasivam Pillai - Vol. V | 1200 | 480.00 |
| | **ஆயுர்வேத நூல்கள் (தமிழில்)** | | |
| 1. | சரக சம்ஹிதை பாகம் - 1 | ... | அச்சில் |
| 2. | சரக சம்ஹிதை பாகம் - 2 | 1400 | 253.65 |
| 3. | சரக சம்ஹிதை பாகம் - 3 | 1700 | 380.00 |
| 4. | சுசுருத சம்ஹிதை - பாகம் - 1 | 1500 | 390.00 |
| 5. | சுசுருத சம்ஹிதை - பாகம் - 2 | 1400 | 272.00 |
| | **தமிழ் மருத்துவ நூல் வெளியீட்டு வரிசை** | | |
| 1. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 1 | 500 | 78.25 |
| 2. | பிள்ளைப்பிணி மருத்துவம் - பாகம் 2 | 800 | 250.00 |
| 3. | பதார்த்த குண சிந்தாமணி | 700 | 150.00 |
| 4. | வர்மத் தொகுப்பு | 700 | 150.00 |
| 5. | அகத்தியர் ஒடிவு முறிவு சாரி நிகண்டகராதி | 400 | 80.00 |
| 6. | அரிய சித்த மருத்துவ முறைகள் | ... | [redacted] 60.00 |
| 7. | புலிப்பாணி வைத்தியம் | ... | 30.00 |
| 8. | குணபாடம் | ... | அச்சில் |
| 9. | சித்த மருந்தாக்கியல் விதிகளும் செயல்முறைகளும் | ... | அச்சில் |
| 10. | மருந்து செய்முறைகள் | ... | அச்சில் |
| 11. | அகத்தீசர் வைத்திய சிந்தாமணி | ... | அச்சில் |
| 12. | சரக்கு - சுத்தி செய்முறைகள் | ... | அச்சில் |
| 13. | நோயும் மருந்தும் | ... | [redacted] 35.00 |
| 14. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 2 | ... | 55.00 |
| 15. | சித்த மருத்துவ அகராதி - பாகம் 3 | ... | 65.00 |

மேற்குறிப்பிடப்பட்ட நூல்களை நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ பெற்றுக் கொள்ளலாம். பதிவுத் தபாலில் புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகங்களின் விலையோடு தபால் கட்டணத்தையும் சேர்த்து பண விடை (எம்.ஓ.) அல்லது டி.டி. மூலம் அனுப்ப வேண்டும். வி.பி.பி.யில் அனுப்ப இயலாது. 2 கிலோவுக்கு மேல் எடையுள்ள புத்தகங்கள் தபாலில் அனுப்ப இயலாது.

**தபால் கட்டணம்**

| | |
|---|---|
| முதல் 500 கிராமுக்குள் | - ரூ. 36.00 |
| 500 கிராமுக்கு மேல் ஒவ்வொரு 50 கிராமுக்கும் | - ரூ. 16.00 |

**பணம் அனுப்ப வேண்டிய முகவரி**

1. இயக்குநர்
   இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை
   அரும்பாக்கம், சென்னை - 600 106.
   தொலைபேசி : 044 - 2621 4844 / 26216244 / 26281563

2. முதல்வர்
   அரசினர் சித்த மருத்துவக் கல்லூரி
   பாளையங்கோட்டை
   திருநெல்வேலி - 627 002.
   தொலைபேசி : 0462 - 2572736 / 2572737 / 2572738

